# உதயதாரகை.—MORNING STAR.

*Published on the 2d and 4th Thursday of every Month at one shilling a Quarter payable in advance.*

[புத். சந்திகை ௩.] ௲அ௱சக ௵. மாசி. ௯, தேயதி வியாழக்கிழமை, Thursday, February 9, 1843. [Vol. III. No. 3.


## வேதியரொழுக்கம்

**Beschi's Instructions to Catechists.—Introductory.**

(பாயிரம்)

மேற்குலமனிதர் செய்யவேண்டிய அறுதொழில்களில்* வேத
த்தைப் போதித்தலுமொன்றாகையால்மேற்குலத்தோரை வேதிய
ரென்பார். ஆயினும் இப்பெயர் தொழிற்பெயராகையால் அந்த
த் தொழிலைச் செய்வார்யாவரும் எக்குலத்திற் பிறந்தாராயினும்
வேதியரெனப்படுவது நியாயமாமே. ஆதலால்வேதத்தைப் போ
திக்குங் குருக்களும் இவர்களிடமாக வேதவுணர்ச்சிகளைச்சொல்
ல அனுப்பப்பட்ட உபதேசிகளும் வேதியரெனப்படுவார்கள். இ
து மெய்யாயினும் வேதியரொழுக்கமென்று நாமிப்புத்தகத்தை
எழுதத்துணிந்தபோது வேதியரென்னும்பெயராற் குருக்களைக்கு
றித்தோமென்று நினைக்கவேண்டாம். காரணக்குருக்கள் யாவரு
ம் பொன்மலை யுச்சிமேல்விளங்கின செஞ்சுடரொப்பநிற்க, நாம்
அவர்கள் பாதத்தையண்டி அவர்களிடத்தில் ஒருகதிரைந்து சிறு
மீனாக நின்றோமாகிற் பாக்கியந்தானே. அவர்கள் வழுவாதொழுகு
ம் உத்தம முறையைக்கண்டு நாமுந் தூரமாயினும் பின்னின்றொழு
க வருந்துவோமொழிய அவர்கள் பிடிக்கவேண்டிய ஒழுக்கத்தை
க்காட்ட நினைப்போமோ? ஆகையால் இதில் வேதியரென்னும்
பொதுவிசேஷமாய் உபதேசிகளைக் குறித்தோமென்று அறியக்க
டவீர்கள்,விசேஷமாயென்றேம். அதேதெனில் நாங்கள் கரையே
ற விலகவேண்டிய தீவினை, செய்யவேண்டிய நல்வினை, அறியவே
ண்டிய சத்தியங்கள் இவையெல்லாம் பிறர்க்குணர்த்துவது உப
தேசிகளுக்குமாத்திரந் தொழிலாமென்று நினைக்கத்தேவையில்லை.
இந்தத் தொழிலைச் செய்வது உபதேசிகளுக்கல்லாதே சிலபெயர்
களுக்குக் கடனுமி எவர்க்கும் பெரும்பலனுமே. தாய் தகப்பன்-த
ம் மக்களுக்கும், ஆண்டவர்-தம் அடிமைகளுக்கும், மூப்பர்-தம்
மைச் சேர்ந்த இளையோர்க்குந் தீவினை விலக்கி நன்னெறிகாட்டி
அவர்களை மேற்கரையேற்ற வருந்துவது கடன்றானே. இக்கடனி
லவாதவர்களும் பிறருயிர் கெடுவதற்கிரங்கிப் பிறரையுங் கதியிற்
சேர்க்கப் பிரயாசப்பட்டால் இந்த அரிய தயையாற்றங்களுக்கு
உத்தமபலனே விளைவதும் விளைந்த பலன் ஒருநாளுங்கெடாது வ
ளர்வதும் சந்தேகமற்ற நிச்சயந்தானே. ஆதலால் இதிலே உப
தேசிகளை விசேஷமாய்க் குறித்து இப் புத்தகத்தை எழுதினாலும்
பொதுப்பட யாவர்க்கும் நன்மையாகமுடிக்கப் பிரயாசப்படுவோ
ம். முதலில் இத்தொழிலியல்பும் மாட்சியும் இன்னதென்று சொ
ன்னபின் இத்தொழில் எவர்க்கும் பொதுத்தொழிலென்று காட்டு
வோம்.—மீளவும் தான் கரையேறுவதன்றிப் பிறரையுமேற்ற வரு
ந்துவது உத்தம தேவதொழிலையாகி இதிலே பிறர்க்குமுதவிய
ன்றித் தனக்குக் கேடாக யாதொருவன் பிழைசெய்தால எல்லா
நிர்ப்பாக்கியங்களிலும் நிர்ப்பாக்கியமாகுமென்றமையால இத்
தொழில் செய்தவர்க்கு ஆயத்தமும் பிறருக்குதவத் தன்னைக் கா
த்தலும் தன்னைக்காப்பதுவேண்டிப் பிறரை மறவாதிருத்தலும் இ
தற்கு அஞ்சினவர்க்கு உறுதியுஞ் சொல்லி அத்தொழிலபலிக்கும்ப
டிக்கு வழிகள் பலவற்றையும் அதனை நன்றாய் முடிக்கும் முறைகள்
பலவற்றையுங் காட்டி இருபது அதிகாரங்களாக இப்பயனை வகு
த்துத்தருவோம். நாம் இதைக் குறைவழுவின்றி முடிக்கவும் இதி
லே நாம் நினைத்த பலனை எவருங் கைக்கொள்ளவும் மனிதரை இ
ரட்சிக்கும் இத்தொழிலைச் செய்ய மனுக்குலத்தோர் மகனாகவந்த
யேசுநாதருதவ மன்றாடி அவர் திருப்பாதத்தை நமது தலையணை
யாக ஏற்றுவணங்குகின்றும். பாயிரம் முற்றிற்று.

## ௧ம். அதிகாரம்.

**The nature of the Catechists' Work.**

### வேதியர் தொழிலியல்பு.

அர்ச்செப்சிஷ்ட சின்னப்பர் திமோத்தேயருக்கெழுதின முதல்
நிருபம் நான்காம் அதிகாரம் பதினாறும் வசனத்திற் சொன்னதா
வது, "உன்னைக்காத்தலும் பிறரை உணர்த்தலுஞ் செய்வாய்,இவ்
விரண்டையும் விடாமல முடிக்கவருந்துவாயாகில் உன்னையும் உ
ன் புத்திகளைக் கேட்டவர்களையும் கரையேற்றுவாயென்றார்." சி
ன்னப்பரிதிலே சொன்ன இவ்விரண்டையும் ஒருப்பட முடிப்பது
வேதியர் தொழிலியல்பாமே. அவனவன் தான் தான் கரையேற
ப் பிரயாசப்படுவது எவர்க்குங் கடனும். இப்பூவுலகில் இன்பமா
யுண்ணவும் அலங்காரமாயுடுக்கவும் திரளாய்ப் பொருள்களைக் குவி
க்கவும் கீர்த்தியாய்ப் பேரொளிதேடவும் செல்வமாய் நெடுநாளிங்
கே வாழவும் மனிதருக்குள்ளே பிறந்தவரொருவருமில்லை. இங்கே
தரும நன்னெறி வழுவாதே மோட்சகதிபெறற்கே முடியா
க்காலத் தயிர்வாழ்ந்திருப்பவே எல்லாரையும் ஆண்டவர் உண்டா
க்கினாரென்றறிவோம். எவ்வகைச் செல்வம் பெற்றாலும் எவ்வகை
நூலபடித்தாலும் எவ்வகைத் திறமடைந்து இராச்சியங்களை
ஆண்டாலும் முன்னும பின்னுமொருநாள் எவருஞ் சாவதொழிய
ப பிறந்தவருட் சாவாதாரில்லை இப்படியே நாலுநாளிங்கே கீர்த்
தியுஞ் செல்வமும் பெற்று வாழ்ந்தபின் வவ்யாய் நாலுநாளாகச்
செத்து என்றென்றைக்கும் நரகவேதனை அனுபவிக்க விழுவதே
அளவறுக்கப்படாத நிர்ப்பாக்கியமல்லோ? ஆகையால் வழிப்போ
க்கர் தங்குஞ் சாவடியாக இப் பூவுலகத்தை யெண்ணி இங்கே வா
ழினும் வருந்தினும்பாரமல்லவென்று முடியா மோட்சத்திலே வா
ழ விடாத கருத்தோடெவரும் பிரயாசப்படுவது நியாயந்தானே.
இதுவே மனிதரெல்லாருக்கும் நன்மையொழியத் தேடத்தகும ம
ற்றொரு மெய்யான நன்மையில்லை. இதனையிழந்து பெரியநரகத்
தில என்றென்றைக்கும் வேவ விழுவது நமக்குத் தீமையொழிய அ
ஞ்சத்தகு மற்றொரு தீமையுமில்லை. இதெல்லாம் ஸ்திரமாய் மனதி
லுணர்ந்து தேறித் தான் கரையேறவருந்துவதல்லாதே இதை அ
றியாதவர்களுக்கும அறிவித்து இதை அறிந்தெண்ணாதவர்களுக்கு
மனதிற்படக்காட்டி மற்றயாவரையும மேற் கரையேற்றப் பிர
யாசப்படுவதே உபதேசிகள் செய்யுந் தொழிலியல்பாமே. ஆகை
யால இத்தொழில விளைவிக்கும் நன்மையின்மேல நமக்கு நன்மையி
ல்லாமையால இத்தொழிலைமேலும் உத்தம தேவதொழிலொன்
றில்லையென்பது நிச்சயந்தானே. கண்கெட்ட ஒருவன் கண்கா
ட்டியுமின்றிச் செல்வழிதப்பித் தாழ்ந்த குழியில விழப்போகிறதை
க் கண்டாயாகில் அவனை உன்னையல்லவென்றும அக்குழியில் நீ
யே விழாதேபோனால உனக்குப் போதுமென்று பேசாதே போ
வாயோ? போனாயாகிற் கொடிய நிட்டூரமென்று மனதிரங்கி உட
னே விழாதே நில்லென்று கூப்பிட்டோடி அவன் கையைப்பற்றி
நன்னெறியில நிறுத்திப் போவாயல்லோ? அஞ்ஞானத்தாலும்பொ
ருளாசையாலும காமமயக்கத்தாலும் பகைவெறியாலும் ஞானக்
கண்ணவிய அறிவுகெட்டு உயர்க்குருடர் பலரெதிரிந்து புண்ணிய
நெறியில வழுவித் தவறி நரகக்குழியில் விழுவதைக் கண்டு மனமிர
க்காமலும உணர்ச்சியாகிய கையைத் தந்து வழியினிறுத்தாமலு
ம் போவது நல்லதோ? அவனென்னைத்தானல்லவென்றும் இது
என்றொழிலல்லவென்றும் உன்னாலான உதவி செய்யாமற்போ
னாற் கொடிய நிட்டூரமல்லோ? பூவுலகத்தின் வஞ்சனைக்கஞ்சி வ
னத்திற் புகுந்து மெய்நாட் சஞ்சலமின்றி ஞானமே தவமே நிழலை
ச் செய்யசுகமாயிருந்த முனிவர்* முதலாயினோர்மற்றவர் உயி
ர் கெட்டு நரகத்தில விழுவதைக் கண்டிரங்கி வனத்தை நீக்கிப்
பகைப்பட வடிப்பட நாட்டிலவந்து விழுவாரைத்தாங்கி விழுந்தாரை
த் தூக்கிகெட்டாரை மறுத்து உயிர் பிழைக்க நிறுத்தி அவர்க்கு
முழுதுசொல்லத் துணிந்தறிவோம். அப்படியே அறுபது வரு
ஷமாக மனிதர் முகத்தைக்காணாதரியதொருவனத்தில ஒளித்திரு
ந்த அசேற்சமனென்கிற மாதவரும் பெருவந்தோனியாரும் திருச்
சபை அவசரங்களைக் கண்டிரங்கச்செய்தார்கள். அப்படியே வீ
ராயனென்பவன் திருச்சபையைப் பகைத்து வேத முறையின
படியே சனங்கள் நடக்கவொட்டாதிருப்பதைக்கண்டு ஒரு முனி
வர் வனத்தைவிட்டுச் சருவாக்கும் உறுதிசொல்லிக்கொண்டு நரிக்

* இந்தமதத்தாருடைய சாஸ்திரப்படி குறித்த அவரவர்தொழில்களாவன ஓ
தல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பனவாம்.

* மெய்யபத்தர்கள் வனத்தவர்களுக்கு உபயாகவும் தனியாகவு மிருக்கிறார்க
ளென நமக்கிதெல்லாம் திருவுளமப்பற்றினபடியாலிப்பேர்பட்டவர்கள் இதற்கு
மாறுதாடடைவிடுக் காடிடிற்சென் றுதவஞ்செய்தனொடிருபயதகாதே

Digitized by Google

தார். இவரை ஒருநாள் இராயன் கண்டு முனியாயிருக்க நீ வனத்திற் கிடவாதிங்கேவந்து திரிவது நியாயமோ என்று கோபித்ததற்கு அவர் சொன்ன மறுமொழியாவது, மதுமலர்மெத்தை மேற்சுகமேவளர்ந்த பெண்ணாயினுந் தன்றகப்பன்வீடு தீப்பற்றி யெரியக்கண்டால் தன் சுகவிருக்கைவிடாமலும் அங்கங்கேயோடித் தண்ணீரெடுத்து வார்த்துப்பற்றின தீயை அவிக்கப்பாராமலும் இருப்பாளோ? என்ன! அப்படி நீ கொடுங்கோலால் வேதத்தையும் நீதியையும் பகைத்துத் திருச்சபையிலெங்குங் கொளுத்தின தீயைக் கண்டு தவத்தின் சுகத்தோடினிதாய் வளர்ந்த நானும் என்னிருக்கைவிடாமலும் பற்றின தீயையவிக்க ஞானவுணர்ச்சிகளை எவருக்குஞ் சொல்லாமலும் இருப்பேனோவென்றார். இதற்கு அற்சேஷட கிறிசொஸ்துமென்பவர் மற்றொருவமை சொல்லிக்காட்டினார். அதாவது கப்பலேறின சிலரே காற்று உரங்கொண்டு பறந்த தன்மையிற் பாய்விரித்தொருகுறையுமின்றிக் கடலிலோடிக்கொண்டு வருகையில் மற்றொரு கப்பல் கெடுவதைக் கண்டால் உடனே அவர்களுக்கிரங்கிப் பாய்களைச் சுருக்கித் தங்கள் பயணங்களை நிறுத்தி வடங்களையும் மரங்களையும் எறிந்து தங்களாலான உதவிகளெல்லாஞ் செய்வார்களல்லவோ? அப்படி நாமும் இப்பூவுலகிலிருக்குந்தனையும் அலைந்த வினைக்கடலின்மேற் கப்பலை நடத்தி வருவோமாக நிற்போம். இதிலே மற்றவர் கெடுவது கண்டால் அவர்கள் யாரோவென்னாமலும் நமக்குதவுற் குறையென்ன வென்னாமலும் பிறர்குறையெங்குறையென்று கெடுவார்க்கிரங்கி நம்மாலான தன்மையால் அவர்களுக்குதவப் பிரயாசப்படக்கடவோம். இது நீதிமுறையின்படியே நம்மைப்போலே மற்றோரையும் நினைக்கும் உத்தம தன்மையே, இதுவே நற்றொழிலியல்பாய்ச் செய்யவேண்டிய முறையே ஆகிலுந் தாங் கரையேறத் தம்மைக் காத்தலும் பிறரைக் கரையேற்ற அவர்களையுணர்த்தலும் உபதேசிகள் தொழிலியல்பென்ற பேர் இந்தத் தொழிலாற் கெடப்படுமிருபலனுக வேறுபட நினைக்கவேண்டாம். நீ உபதேசித்தொழிலைக் கைக்கொண்ட பின் உன்னீடேற்றமும் பிறரீடேற்றமும் இவ்விரண்டும் ஒன்றாகப் பிணைக்கப்பட்ட தன்மையைப் பார்க்கும்பொழுதில் பிறரை எவ்வளவாக மோட்சகரையிலேற்றப் பிரயாசப்படுவாயோ அவ்வளவாக நீயும் மோட்சத்திலதிகவரிசைபெற்று வாழ்வாய். அல்லது புறத்தியார் கரையேற உன்னாலானமட்டும் உதவியைச் செய்யாயாகில் நீயுங் கரையேறமாட்டாய். பலரைக் கரையிற் சேர்க்க ஏற்றிக்கொண்டு கப்பலை நடத்துமாலுமியின் அசட்டையினால் நடுவழியிற் கப்பல் கீழே கல்லிலே மோதி யுடைந்தும்போய் மற்றயாவரும் அமிழ்ந்திப்போகையில் மாலுமி தப்பிக் கரையிற் சேருவானோவென்ன? ஆகிலுங் கப்பல் நன்றாயோடிவருகையில் ஒருவரிருவர் நியாலாயினும் ஆங்காரத்தாலாயினும் தவறிக் கடலிலே விழுந்து செத்தாலும் மாலுமிதானும் மற்றவர்களுங் கரையேறுவார்களல்லவோ? அப்படியே நீ எல்லாரையுங் கரையிலேற்ற உனக்குக்கடனில்லை. உன் வார்த்தைகேளாமற் சிலரே மோசம்போனாலும் உனக்குக் குறையுமில்லை. நீயே செய்யவேண்டியதைச் செய்யாமற் கப்பலுடைந்தாற்போல உன் குறையினாலே மற்றவர்கள் நரகத்திற்போக நீ தப்பி மோட்சகரையிற் சேருவாயென்று நம்பவேண்டாம். ஆகையால் தன்னீடேற்றத்துக்கும் பிறரீடேற்றத்துக்கும் பிரயாசப்படுவது இவ்விரண்டையும் பிரியாமல் ஒன்றாக எண்ணி மிகவுஞ் சந்தோஷத்தோடே இந்தத் தேவதொழிலை எவரும் நடக்கக்கடவார்கள். (கம. அதிகாரம் முற்றிற்று.)

---

(Missionary Enterprizes in the South Seas.)

### தென் சமுத்திரத்தில் நடந்த சங்கதி.

(Continued from page 301, Vol. II..)

போதகர்களிருவருந் தாங்களிருக்கிற ஸ்தலத்திலே வந்ததின்மேல் ஒரு பூசாரி பத்துவயதுள்ள ஒரு பொடியனை இவர்களிடத்திற் கொண்டுவந்து தான் தன்னுடைய விக்கிரகங்களை எரித்துப்போட விருக்கிறபடியால் அவைகள் கோபமுண்டு இந்தப் பிள்ளையைக் கொல்லாதபடிக்கு அவனுங்களுடனே இருக்கட்டுமென்று சொல்லிப்போனான். மற்றநாட்காலமே அந்தப் பூசாரி அந்தப் பாரமானவிக்கிரகத்தை எடுத்துத் தன்தலையிலே வைத்துக்கொண்டு போதகர்களண்டைக்கு முதுகு கூன நடந்துவந்தான், அப்பொழுது சனங்கள் அவனைப்பார்த்து, அடே பயித்தியகாரா, எங்கே போகிறாயென்று அவனைக்கடிந்து பேசிக்கொண்டு அவனுக்குப்பின்சென்றார்கள். அவனோவென்றால் அவர்கள் பேச்சைக் கவனியாமல், யெகோவாவாகிய பராபரனையே வணங்கவேணுமென்றவெண்ணத்தோடே அந்த விக்கிரகத்தைச் சுமந்து கொண்டுபோய்ப் போதகர்களுடைய பாதத்தடியிலே வைத்தான். போதகர்களிலொருவர் தன்னிடத்திலிருந்த வாளை எடுத்துக்கொண்டு வந்து அந்தச் சிலையின் தலையை வெட்டினார், வாள் சிலையின் தலையிலே வைத்தவுடனே சனங்களெல்லாரும் பயந்து கிட்டநில்லாமலோடிப்போய்விட்டார்கள். மனந்திரும்பிக் குணப்பட்டவர்களிற் சிலர் தானுந் திடுக்காட்டம் பிடித்தவர்களாயோடிப் பற்றைகளுக்குள்ளே யொழித்திருந்து மறுபடி திரும்பிவந்தார்கள். இப்பொழுது அறியப்பட்டவிக்கிரகத்தைக்குறித்துத் தீவாருக்குள்ளே பேச்சும் பயமுமதிகப்பட்டதினாலே அதைப்பற்றிய பேச்சையும், பயத்தையும் நீக்கும்பொருட்டாகப் போதகர்களொரு உபாயம்பண்ணினார்கள். அதென்னவெனில், இந்த விக்கிரகத்தைச் சுட்டுத் தணலாக்கினபின்பு அதிலொரு போசனத்தைப்பொரித்துத் தாங்களுஞ் சாப்பிட்டுத் தீவாரையுஞ் சாப்பிடச்சொல்லிக் கேட்டார்கள். அவர்களோ இந்தப் போதகர்கள் மெய்யாகவே மரித்துப்போவார்களென்றெண்ணிச் சாப்பிடமாட்டோமென்றதுமல்லாமல், இவர்கள் மரித்துப்போவார்களென்று வெகுநாளாய்க் காத்திருந்தார்கள். இவர்களும் அப்போஸ்தலருடைய நடபடிப் புத்தகத்திலே சொல்லியிருக்கிற (மீலெத்தே) தீவாரைப்போலப் போதகர்களுக்கு அதின்நிமித்தம் யாதொரு தீங்கும் வரவில்லையென்று கண்டு, போதகர்கள் சொல்வதெல்லாம் மெய்யென்று நம்பத்தொடங்கினார்கள். சத்தியமானது சனங்களுடையமனதிலே பட்டதினாலே பத்துப் பதினொருநாளைக்குப்பின்பு சிலர்கூடிப் பதினாலு விக்கிரகங்களைக்கொண்டுவந்து சுட்டார்கள், முன் சொல்லப்பட்ட (தின்னூமன்) என்னும்பிரதானி மறுபடியுமிந்தப் போதகர்களுக்காளனுப்பினான். அவர்களிவனிருக்கிறவிடத்திலே வந்தபொழுது தான் விக்கிரகாராதனையை விட்டுவிடத் தீர்மானித்திருக்கிறதை இவர்களுக்குச் சொன்னதுமல்லாமற் சத்தியவேதத்தை ஏற்றுக்கொள்ளுகிறதற்கு முதன் முதற் செய்யவேண்டிய கடமைகளென்னவென்றும் விசாரித்தான். அதற்குப் போதகர்கள் "நீர் முன்னுக்கு உம்முடைய விக்கிரகங்களைச் சுட்டுப்போடவேண்டு" மென்றுசொன்னார்கள். அதற்கிவன் "நீங்களுமென்னுடனே வாருங்கள், நான் அவைகளைச் சுட்டுப்போடுகிறேன்" என்றான். இவர்கள் கூடக்கொண்டுபோனதின்மேல் விக்கிரகங்களை வெளியே கொண்டுவந்து சுட்டுப்போடப் பிரதானி தன்வேலைக்காரனுக்குக்கற்பித்தான். அப்படியே வேலைக்காரன் நாலுபெரிய விக்கிரகங்களை வெளியிலே கொண்டுவந்து அவைகளைச் சுற்றியிருந்த ஓலைகளையுரிந்து சனங்களுக்குப் பங்கிட்டுக்கொடுத்ததின்மேற் போதகரிலொருவர் அந்தருணத்துக்கடுத்ததாய் லூக்கா சுவிசேஷத்திலே பத்தாம அதிகாரத்திலொரு பகுதியை வாசித்தார். பின்பு அந்த விக்கிரகங்களையெடுத்துச் சூளையிலேபோட்டார்கள். இவ்விதமாகவே இந்தப் பிரதானிக்குக் கீழாயிருந்த குடிச்சியிற் சனங்கள் விக்கிரகாராதனையை விட்டொழிந்தார்கள். ஆகிலும, சனங்களிற்சிலர் முதலாளியானவன் விக்கிரகங்களை யெரியப்பித்ததினாலே, அவனோடே முறுமுறுத்துச் "சமுத்திரத்தனையிலே அன்னியவந்த சாதாரணச்சரியான இந்த மனிதருடைய வார்த்தையையா நீ கேட்டு எங்கள் தேவர்களை யெரித்தாய் பயித்தியக்காரா" என்று சொன்னார்கள். பெண் சனங்களுமோவென்றால் தங்களுடைய மயிரைப்புக் குலைத்துத் தலையைக் கலுக்களினாலும் மீன் பல்லுக்களினாலும் இரத்தம்பாயத்தக்கதாய் கிருண்டிக்கொண்டு இக்குரலைக்குமோடி அய்யோ! அய்யோ! பயித்தியக்காரனாகிய (தின்னூமன்) எங்கள் விக்கிரகங்களை எடுத்தெரித்துப் போட்டானேயென்றுசொல்லித் துக்கங்கொண்டாடினார்கள். இன்னுஞ் சிலர் துக்கத்துக்கடையாளமாகக் கரிகளைப் பூசிக்கொண்டு இவர்களுடனே வந்துநின்றார்கள். ஆகிலுஞ் சிலநாளைக்குப்பின்பு சிலர் தங்கள் விக்கிரகங்களை இவர்களிடத்திற் கொண்டுவந்து சிலதைச்சுட்டு, சிலதை (இராபதத்தியா) வுக்கு அனுப்பினார்கள். அடுத்த ஞாயிற்றுக்கிழமை தேவாராதனையை நடப்பிக்கத் தொடக்கம்பண்ணியிருந்தபடியினாலே உபாத்தியாயர் (தின்னூமனையும்) அவன் கூட்டாளிகளையுஞ் சனிக்கிழமையிலே போசனமாயத்தம்பண்ணிவைத்துக்கொள்ளக் கற்பித்தார்கள். அவ்விதமாகவே இவர்கள் ஞாயிற்றுக்கிழமை தேவாராதனைக்கூட்டத்துக்கு வருகைப்பாது தாங்கள் விக்கிரகாராதனைக்காரராயிருக்கிற அந்தப் பக்கத்தாராலே வெல்லப்படாதபடிக்குக் கவண்டிகளையும் இட்டிகளையுந் தங்களுடனே கூடக்கொண்டுவந்தார்கள். [இன்னும் வரும்.]

Digitized by Google

## ABRIDGEMENT OF GOOD'S BOOK OF NATURE.

### *Sleep, Dreaming, Sleep-Walking, and Sleep-Talking.*

CHAP. VII.] [PART II.

1. The earth is a scene of busy action; all is change, and every thing and every creature has a part to perform. But the Creator is not a hard task-master; he has kindly provided a season of rest for the living world.

2. Plants in general, and many animals, chiefly the two lowest orders and the amphibials, rest during the winter. A few animals sleep through the day and roam abroad during the night, like the tiger, the lion, and indeed all the cat kind. But most of the animals take their rest during the night.

3. The night is the proper time for man to enjoy repose. How different are the two states of wakefulness and sleep! —Now the senses are in full vigor and activity, alive to every pursuit, and eager for exertion; then we sleep, and the senses are all suspended, and the helpless body seems sunk in a death-like torpor. Yet the mind is not always quiet and torpid like the body. Every one knows what is meant by dreaming; but the causes of dreams are more difficult to understand.

4. Sleep may be either natural or morbid. Natural sleep is caused by whatever exhausts the principle of life, as great fatigue of body or mind, pain, or excitement of the senses. This sleep consists of three stages—slumber, dreaming, and lethargy or dead sleep, without thought or idea of any kind; the vital organs only continuing their action.

(To be continued.)

---

(Translation of the foregoing.)

### கூட்டேன்பவர் செய்த பிரபஞ்ச நூல்.

௭ம். அதிகாரம். ௨ம். பிரிவு.

நித்திரை, சொப்பனம், நித்திரை நடை, வாய் பொருமல்.

௧. சகமானது முயற்சியான நடையுள்ள தன்மையைக்கொண்டிருக்கின்றது. அனைத்தும் மாறுதலுள்ளது. சரமசரமனைத்துஞ் செய்யவேண்டிய பங்குகளுண்டு. ஆனால் சிருட்டிகரோ ஒருகொடிய எசமானல்ல. உயிருள்ள உலகத்தாருக்கு ஆறுதலின் காலத்தை அவர் மெத்தப் பட்சமாய்க் கொடுத்திருக்கிறார்.

௨. பூண்டுகள் பெரும்பாலும் பிரதானமாய்க் கீழ்த்தரமான வகையைச் சார்ந்த இரண்டு மிருகங்களும், நீரிலுங் கரையிலும் வாழும் மிருகங்களும் இராக்காலத்தில் ஓய்ந்திருக்கின்றன. புலியுஞ் சிங்கமும் பூனைவகையோடடுத்ததாகிய மிருகங்கள் பகல் முழுவதும் நித்திரைகொண்டு இரா முழுதுங் கருச்சித்துக்கொண்டு வெளியே திரிகின்றன.

௩. இராக்காலந்தானே மனிதன் சுகத்தை அநுபவிக்கிறதற்குத் தகுந்த வேளையாயிருக்கின்றது. விழிப்பும நித்திரையுமான இரண்டு நிலைகளும் எவ்வளவு வித்தியாசம்! இப்போ புலன்களெல்லாம் பூரண முயற்சியுடனும் சாக்கிரதையுடனும் இருக்கின்றன. ஒவ்வொரு காரியங்களுக்குமுயிர்ப்பாகி ஒவ்வொரு பிரயத்தனத்திற்கும் ஆவாக்கொண்டிருக்கின்றது. பிறகு நாம் நித்திரைகொள்ளுகிறோம். புலன்களெல்லாந் தங்கிப்போயின. அப்போ உதவியற்ற சரீரமுயிர்ப்பற்ற சோம்பலிலே கவிந்து போகின்றது. அப்படிப்பாயினும், மனது சரீரத்தைப்போல எப்பொழுது அமைதியாகவும் சோம்பலாகவும் இருக்கிறதில்லை. சொப்பனம் யாதென எவனுக்குந் தெரியும, அதின் காரணம் இன்னதென நமக்கு விளங்காது.

௪. நித்திரை இயல்பாகவும் அன்பத்தினாலும் உண்டாகின்றது. சுபாவ நித்திரையானது சரீர அல்லது மன இளைப்பினால், அல்லது வருத்தத்தினால் அல்லது புலன்களின் எழுச்சியினாலேயாவது ஜீவனின் நிலையை வாட்டுகிறதினால் உண்டாகின்றது. இப்படிப்பட்ட நித்திரைக்கு மூன்றுபடியுண்டு மந்த நித்திரை, சொப்பனம், அசந்த சோம்பல் நித்திரை. இவ்வேளையில் யாதொருகருத்தாகுதல் எண்ணமாகுதல் உண்டுபடாது. சீவக் கருவிகள் மாத்திரம் தங்கள் செய்கையில் நிலைத்திருக்கின்றன.

(இன்னும் வரும்.)

---

## ABBOTT'S LESSONS ON MORALS.

(Adapted to Hindu Readers.)

### *Lesson I.*—CONSCIENCE. (Continued.)

A boy named Teruvampalam suffered, for a great many months, from the reproaches of Conscience, and he at last quieted her voice, and regained his peace of mind, by confessing his sin and making reparation. The case was this: He one night climbed over into a gentleman's garden, which was situated in a pleasant lane, not far from the village where he lived in order to get some oranges from an orange tree. He got his cloth full of very sweet oranges and then came back safely. Conscience warned him not to go; conscience remonstrated with him while he was going, and while he was upon the tree: and conscience bitterly reproached him after the deed was done. The poor boy found that, for the sake of a cloth full of oranges, he had almost entirely destroyed his peace of mind. He often thought of his transgression at night, and when he was alone. He was always afraid when he met the gentleman in the street to whom the garden belonged; and the little lane, where, before, he always used to like to walk and play, now made him feel so melancholy and wretched, that he kept away from it entirely.

At last, one day, he went and told the gentleman what he had done. He said that he had no money to pay for the oranges, but that, if the gentleman would let him work for him, bringing in wood or doing errands, enough to make reparation he should be glad to do it.

The gentleman said that he was very glad he had come, and confessed his fault; that he would willingly forgive him, and that he need not come and work for him, for he did not wish to have him make any reparation. But the boy replied that he wanted to pay him for the oranges very much, and that, if the gentleman had any work for him to do, he wished very much that he would let him do it. So the gentleman let him pile wood for him two hours one afternoon in the wood-shed. By this means, the boy's peace of mind was entirely restored, and he loved to play in the green lane again as well as ever.

Thus conscience utters her warnings, remonstrances, and reproaches to deter us from doing wrong. And, if we will cease to do wrong, and be faithful in fulfilling our duty, she will restore our peace of mind, and cheer, and encourage us by her smile of approval. Peace of mind and a quiet conscience are of inestimable value. Without these, all other means of enjoyment will fail of making us happy, and with them, whatever other privation we may suffer, life may pass pleasantly away.

QUESTIONS ON LESSON I.

Relate the story of Teruvampalam and the oranges.
What is this story intended to illustrate?
Do you recollect what is said at the close of the lesson, of the importance of peace of mind?

Digitized by Google

## நன்மார்க்கநெறி.

### சீவசாட்சி அல்லது மனச்சாட்சி.

திருவம்பலமென்று பேரையுடைய ஒரு பொடியன் வெகுமாசக்காலமாகச் சீவசாட்சியினாலுண்டான நிந்தைக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தான். அதன் பின்னால், சீவசாட்சியினாலுண்டாகுஞ் சத்தத்தை அமுதற்படுத்தித் தான் செய்த பாவங்களை அறிக்கையிட்டு அதற்குத் தக்க மாறுத்தரவளித்ததினாலே தான் இழந்துபோன மனச்சமாதானத்தைத் திரும்பவும் அடைந்துகொண்டான். அவன் செய்துகொண்ட காரியமென்னவானால், தானிருந்த கிராமத்துக்குக்கிட்ட ஒரு சிறப்பான ஒழுங்கையில் ஒரு துரைமகனுடைய தோட்டத்தில் நின்ற ஒரு தோடை மரத்தில் ஒரு நாள் இராக்காலத்தில் ஏறித் தனது சீலை நிறையப் பழங்களைப் பிடுங்கிக்கொண்டு பத்திரமாய் இறங்கிவந்துவிட்டான். அப்போ சீவசாட்சியானது இறங்கிப்போகாதபடி பண்ணிற்று. அவன்போகிறவேளையிலும் மரத்திலிருக்கிறவேளையிலுஞ் சீவசாட்சியானது அவனைத் தடுத்துப் பயமுறுத்துறுத்திற்று. அவன் பழத்தைப் பிடுங்கினதின் பின்னுஞ் சீவசாட்சி அவனை அதிக உறைப்பாய் நிந்தைப்படுத்திற்று. அப்போ சீலை நிரம்பப் பழத்தைத் பிடுங்கினதற்காகத் தனது மனச்சமாதான முழுமையையும் இழந்துபோனேனென்று பொடியனுக்குத் தெரியவந்தது. இரவிலேயுந் தனியே இருக்கும்பொழுதுந்தான் செய்தகுற்றத்தைப் பற்றிப் பலமுறையும் நினைத்தான். அந்தத் தோட்டத்துக்குடையவனாயிருந்த துரைமகனை வழியில் இவன் காணும்பொழுதெல்லாம் மெத்தப் பயந்துகொண்டிருந்தான். இன்னும் அவன் பலவேளையிலுஞ் சந்தோஷமாய்ப் போய் உலாத்தி விளையாடிவந்த தெருத்தானே அவனை நிர்ப்பந்தனும் பொல்லாதவனுமாக்கினதினால் அந்தத் தெருவுக்கும் போகாமல் விட்டுவிட்டான்.

கடைசியாய் ஒரு நாள் அந்தத் துரையிடத்துக்குப்போய்த் தான் செய்த குற்றம் இன்னதென அவருக்கு அறிவித்துப் பிடுங்கின தோடம் பழங்களுக்கு விலைதர எனக்குப் பணமில்லை; ஆனாலும் நான செய்த பொருளழிவைச் சரிக்கட்டிக்கொள்ளத் தக்கதாய் நீர் எல்லை விறகு பொறுக்க அல்லது காவதங் கொண்டுபோக வைத்தீரேயாகில் நான் அதை மனப்பூரணத்துடன் செய்வேன் என்றான். அவன் வந்து இவ்விதமாய் அறிக்கையிட்டதற்காகத் தான் சந்தோஷமாய் அவன் செய்த குற்றத்தை மன்னிப்பேனென்றும் அவன் செய்த பொருளழிவை மறுவிதமாய்ச் சரிக்கட்டிக்கொள்ளத் தனக்குப் பிரியமில்லையென்றுஞ் சொல்லி அவன் கேட்டமாதிரி அவன் வேலைசெய்யும்படி சொல்லவில்லை. ஆனாலும் அந்தப்பொடியன் தான் பிடுங்கின தோடம்பழத்துக்குப் பணங்கொடுத்துப்போட விருப்பமாயிருந்ததினால், அந்தத் துரை தன்னை வேலைசெய்யும்படி வைத்தால் அதை மனப்பூரணத்துடன் செய்யும்படி பிரியப்பட்டான். அப்பொழுது அந்தத் துரை எப்பொழுதும் அவன் பின்னேரம் இரண்டு மணித்தியாலயளவுக்கு விறகுபொறுக்கும்படி வைத்தார். இப்படிச் செய்ததினாலே தான் இழந்த மனச்சமாதானத்தைத் திரும்ப அடைந்து எப்போதையும்போலே அந்தத் தெருவிலே போய் விளையாடிவந்தான்.

சீவசாட்சியானது நாங்கள் தப்பிதஞ்செய்யாதபடிக்கு எச்சரித்துப் பயமுறுத்தி நிந்தைப்படுத்துகின்றது. நாங்கள் பொல்லாப்பை விட்டு எங்கள் கடமையை உண்மையாய்ச் செய்தோமேயானால், சீவசாட்சி எங்களுக்கு மனச்சமாதானத்தைக் கொடுத்து எங்களைச் செந்தளிப்புள்ளவர்களாக்கி, எங்களைத் தைரியப்படுத்துகின்றது. நன் மனமும், நன் மனச்சாட்சியும் விலைமதிக்கக்கூடாத பொக்கஷமாயிருக்கின்றன. இவைகளில்லாமல், நாங்கள் பண்ணும் சுகாதுபோகங்களெல்லாம எங்களுக்குச் சந்தோஷத்தைக் கொடாதிருக்கும். நாம என்ன துக்கடுத் தொந்தரையை அடைந்தாலும சீவனானது மெத்தச் சந்தோஷத்துடன் சென்றுபோம்.

#### கேள்வி.

திருவம்பலத்தையும் தோடம்பழத்தையும் பற்றிய கதையைச் சொல்லு?

இந்தக் கதை என்னத்தை விபரிக்கின்றது?

மனச்சமாதானத்தை அடைந்துகொள்வதினால் வரும் நன்மையைப் பற்றி இந்தப் பாடக் கடைசியிலே சொல்லப்பட்ட கதை உனக்கு நினைப்பாயிருக்குதே?

## MR. POOR'S LETTERS TO HIS LATE PUPILS.

### No. 3.

*Subject of the last letter continued.*

My Young Friends,

Your position in society is novel and peculiar, on account of your *relative standing among your own countrymen*. You are not the sons of nobles, nor were you educated with the proceeds of your father's estates. You were not the favoured selection from the mass of your countrymen, nor were you nourished and brought forward by the Queen's bounty and patronage; and, least of all, are you the persons who were recommended to us by the head-men of the province as suitable persons to receive the boon that has been conferred upon you. A single illustration will explain my meaning. It will do more: it will also show, that while Christianity is eminently elevating in its tendencies, it is also *levelling* and *modifying*, so that "the first shall be last, and the last first." On opening the Charity Boarding school for natives at Tillipally in 1810, I invited the head-man of the parish, to my house, and explained to him, at length, the object of the projected school, and its probable bearings upon the state of things in the community. I then informed him, that as we had no object in disturbing the present arrangement of society, or in changing the relative standing of individuals and families, we were desirous of making him the first offers of assistance, and thereupon proposed that he enter one or more of his sons, as members of the recently established Boarding school. To induce him to do this, and thus set a salutary example to his countrymen, I stated some of the advantages which might accrue, both to himself and to his children. I needed not a knowledge of the Tamil language, to understand his pointed and indignant refusal. This was sufficiently indicated by a peculiar smile of countenance, and the shake of his head. I then told him that very likely some of those whom he now regarded as being beneath his notice, might, by means of the education which we were desirous of imparting, become his children's superiors.

It is now in point, to observe, and to *record*, that the first lad, formally received into the school, was I. W. P. He was given up for the purposes of board and education, by his father, who was willing to be relieved from the burden of supporting his son, and who had courage enough at that early period of the mission, to sign the required bond, written upon a government stamp. This lad, then six or seven years of age, passed through a preparatory course of study in the Boarding school at Tillipally;—was a member of the Batticotta Seminary at its commencement, in 1823, and a member of a class consisting of 15 individuals, who first finished the appointed course of study in that Institution, and received an honorable dismission in 1828. In the ensuing year, I. W. P. was employed as a writer in the Cutchery, in Jaffna, where he has remained to the present time in a course of promotion under the immediate superintendance of the principal Government Agent in the province. Were the headman to whom I have referred, now alive, he might see, with deep regret, that rank and wealth are not to be relied upon, when brought into competition with the superior advantages of education, in the case of those who are cast upon their own resources. It is, you are aware according to the common course of events, that sons should succeed their fathers in office and in standing in society, and that those should be educated, whose fathers are able to meet the requisite expence. But *it has not thus happened with you;* and this is the peculiarity to which I have here referred.

6 You will be regarded as fair specimens of *moral* and *religious* culture upon the soil of Hinduism. It is a novelty in the land, for children, born of Hindu parents and fully initiated into the practices of idolatry, to be suddenly transplanted into Christian families, and for eight or ten years to enjoy the advantages of an extended course of moral and religious training. It must be a matter of curiosity at least, even to otherwise uninterested spectators, to notice the results of such an experiment.

What characters will be formed under influences so powerful, so diverse, and so mutually counteracting? The principal points of inquiry in this connexion will be (1) What proportion of persons under such influences, will give credible and continued evidence of a cordial and a saving reception of the Gospel of Christ, and what will be the character of Native converts brought forward under such a course of training?

2. What proportion will, either from conviction, or custom, or the love of popular favor, continue the adherents of idolatry, in its more gross and vulgar forms?

3. What number, being driven from the monstrous system of Hinduism, will take refuge in some of the endless forms of infidelity? and

4. Whether the *moral principles* of Christianity will effect a lodgement, for any important practical purposes, in the minds of those who reject the system of Christian doctrine, as a rule of faith and practice? Will a bare knowledge of the morality of divine revelation produce such effects upon their character and moral habits, as will render them *more trust worthy, more public spirited*, or in any respects, better *members of society*?

The *religious* influences of Gospel truth, as already developed, present

Digitized by Google



Digitized by Google



Digitized by Google

a clear and most instructive illustration of the view given of this subject by our Lord in the parable of the "sower." We have had much to do, especially with the three classes fitly represent ed by the seed sown "in stony places." "among thorns." and, we have pleasing evidence to believe, "in good ground." also. A due attention to this parable will greatly assist us in our anticipations of the effects of divine truth upon the human heart.

7. Finally, your position in society is novel and peculiar, on account of the relation you sustain to *foreigners*,—to foreigners who have in an important sense adopted you, as their children,—and who cannot be indifferent spectators to what may befall you in life. The missionaries, who have spent much of their best time and strength in the immediate superintendence of your education,—your liberal benefactors, on the other side of the globe, who have made annual remittances for your maintenance,—and the American Board of Commissioners for Foreign missions under whose auspices the mission in Jaffna was established, are deeply interested in your welfare, and they must ever be desirous of knowing the results of what they have done for you. That you may the better understand the relation you sustain to your benefactors, and know what is requisite on your part, in order to meet their reasonable expectations, I purpose to give you in subsequent letters a brief sketch of the origin of the American Board of Missions, and to narrate a few of the circumstances which led to the establishment of an American mission in north Ceylon.

*Tillipally*, *January* 17th, 1843. — Yours very truly, D. Poor.

---

### Principles of English Grammar.

(By William Lennie.)

Etymology.

#### Of Nouns.

A *Noun* is the *name* of any person, place, or thing, as *John*, *London*, *Book*.

**Nouns are varied by Number, Gender, and Case.**

#### Of Numbers.

Number is the distinction of *one* from *more*.

Nouns have *two* numbers; the *Singular* and the *Plural*. The singular denotes *one*, the plural *more* than one.

1. The plural is generally formed by adding *s* to the singular; as, book, books.
2. Nouns in *s*, *sh*, *ch*, *x*, or *o*, form the plural by adding *es*; as Miss, misses; brush, brushes; match, matches; fox, foxes; hero, heroes.
3. Nouns in *y* change *y* into *ies* in the plural; as, *Lady*, *Ladies*;—*Y* with a vowel before it, is not changed into *ies*; as, *Day*, *Days*.
4. Nouns in *f* or *fe*, change *f* or *fe* into *ves* in the plural; as, *Loaf*, *loaves*; *life*, *lives*.

Observations.

Nouns ending in *ch* sounding *k*, form the plural by adding *s* only; as, *stomach*, *stomachs*.

Nouns in *io*, with *junto*, *canto*, *tyro*, *grotto*, *portico*, *solo*, and *quarto* have *s* only in the plural; as, *folio*, *folios*; *canto*, *cantos*.

Nouns in *ff* have their plural in *s*; as, *muff*, *muffs*; except *staff*, which sometimes has *staves*

*Dwarf*, *scarf*, *wharf*; *brief*, *chief*, *grief*, *kerchief*, *handkerchief*, *mischief*; *gulf*, *turf*, *surf*; *fife*, *strife*; *proof*, *hoof*, *roof*, and *reproof*, never change *f* or *fe* into *ves*—14 change *f* or *fe* into *ves*, 27 do not

### இங்கிலிசுப்பாஷையைக் கற்கப்புது மாணுக்கருக் குபயோகமாதற்பொருட்டு வழக்கத்தமிழ் நடையாக மொழி பெயர்க்கப்பட்ட வில்லியம் லெனிஸ என்ற துரைஇங்கிலிசிற்செய்த இலக்கணச்சாரம்.

சொல்லதிகாரம்.

பெயர்ச் சொல்லியல்.

பெயர்ச் சொல் என்பது ஆள், இடம், பொருள் என்பவற்றின் பெயரேயாம். யோவானென்பவன், லண்டன் நகர், புத்தகம்—என்பனபோல.

பெயர்ச் சொற்கள் எண், பால், வேற்றுமை என்பவற்றால் வேறுபடுத்தப்படும்.

எண்.

எண்ணென்பது ஒன்றெனவும், பலவெனவும் பகுத்தறிதலாம்.

பெயர்ச் சொற்கள் ஒருமை, பன்மை, என்னும இரண்டு எண்களை உடையனவாம்.

ஒருமையென்பது ஒன்றையும், பன்மையென்பது ஒன்றுக்கு மேற்பட்டவையையுங் காட்டும்.

௧வது. ஒருமையோடு *s* விகுதியைக் கூட்டுவதால் சாதாரணமாகப் பன்மையுண்டாகும். புத்தகம், புத்தகங்கள் —என்பனபோல.

௨வது. *s*, *sh*, *ch*, *x*, *o* என்னும் எழுத்துக்களால் முடியும் பேர்களோடு *es* விகுதியைக் கூட்டுவதால பன்மை உண்டாகும். கன்னிகை, கன்னிகைகள்; மயிர்த்துடைப்பம், மயிர்த்துடைப்பங்கள்; பிரங்கித்திரி, பிரங்கித்திரிகள்; குழிநரி, குழிநரிகள்; வீரன், வீரர் —என்பனபோல.

௩வது. *Y* எழுத்தால் முடியும் பெயர்கள் அவ்வெழுத்தை *ies* ஆகத் திரிப்பதால பன்மையாம. பெண், பெண்கள்—என்பனபோல. (ஆயினும்) *Y* எழுத்துக்கு முன் உயிர் நின்றால் அவ் *Y* எழுத்து *ies* ஆகத் திரிதலின்றாம். நாள், நாட்கள் —என்பனபோல.

௪வது. *f*, *fe* எழுத்துக்களால் முடியும் பெயர்கள் அவ்வெழுத்துக்களை *ves* ஆகத் திரிப்பதால் பன்மையாம். கோதுமை அப்பம், கோதுமையப்பங்கள்; ஜீவன், ஜீவன்கள் —என்பனபோல.

புறனடை.

*K* எழுத்தைப் போலவொலிக்கும் *ch* எழுத்துக்களால் முடியும்பெயர்களோடு *s* விகுதியைமாத்திரங்கூட்டுவதால் பன்மை உண்டாகும். இரைப்பை, இரைப்பைகள்—என்பன போல.

*io* எழுத்துக்களால் முடியும் பேர்களும் junto (இரகசியக்கூட்டம்) canto (பிரபந்தம்) tyro (நவவித்தியார்த்தி) grotto (கெபி) portico (மண்டபம்) solo (ஓராவகைராகம்) quarto (நாலாய் மடித்ததாட்புத்தகம) என்ற பெயர்களும் பன்மையில் *s* விகுதியையே பெறும. இரண்டாய்மடித்த தாட்புத்தகம், இரண்டாய்மடித்த தாட் புத்தகங்கள்: பிரபந்தம், பிரபந்தங்கள், எ-ல.

*ff* எழுத்தால் முடியும் பெயர்கள் பன்மையில் *s* விகுதியைப் பெறும். தோற்கைமேசு, தோற்கைமேசுகள்; எ-ல (ஆயினுமிவற்றுள்) staff (கோல்) என்னுஞ் சொல் சிறுபான்மை staves என நின்றும் பன்மையைக் கொடுக்கும்.

Dwarf குள்ளன், scarf ஓராவகை உத்தரீகம், wharf சரக்கு இறக்குமிடம், brief சுருக்கம், chief சிரேட்டன், grief துக்கம், kerchief தலைச்சோமம், handkerchief லேஞ்சி, mischief தீங்கு, gulf குடாக்கடல், turf புற்கற்றை, surf அலை, fife வேய்க்குழல், strife சண்டை, proof திருட்டாந்தம், hoof குளம்பு, roof கூரை, reproof கண்டனை—என்னும மொழிகளில் இற்றில் நிற்கும *f*, *fe* எழுத்துக்கள் *ves* ஆகத் திரியாவாம். *ves* ஆகத் திரியுஞ் சொற்கள் பதினான்கும், திரியாச் சொற்களிருபத்தேழுமாம.

---

[Brief descriptions of the most remarkable birds, illustrated by cuts on a comparative scale.]

### The Cassowary.—தழல்விழுங்கி.

யாவகத்தீவில்மாத்திரஞ் சஞ்சரிக்கின்ற தழல்விழுங்கியானது மற்றேனைய பட்சிசாலங்களிலும் பெரிதாயும் உயரமுள்ளதுமாயிருக்கின்றது. பருமத்தில் பட்சி நீக்குருவியைப்போலவிராவிட்டாலும் பார்க்கிறதற்கு மிகப் பெரிதாகத்தோன்றும். ஏனென்றால், அதின் சடலமுழுவதும் ஏகபாகத்துக் கோரமாதிரியாயும் அதினுடைய கழுத்துங்காலுமொன்றுக்கொன்று விகற்பங்கொண்டு தடித்துப்பருத்திரத்ததாயும் அதினுனிச்சொண்டு தொடக்கிக் காலுனியளவுக்கு ஐந்தரையடி உயரங்கொண்டதாயும் உதரந்தொடுத்துக் காலுனியளவுக்கும் அதினுடைய கால்கள் இரண்டரையடியும், தலையுங்கழுத்தும் ஒன்றரையடியுயரம் உள்ளதாயிருக்கின்றதும பெருவிரலும் மற்றவிரல்களும் ஐந்தரையடியுயரமும், இன்னவிரகம் மூன்றரையடியுயரமுள்ளதுமாயிருக்கின்றது. அதின் சிறகுகள் முதுகின் இறகுகளுக்குள்ளே மறைந்திருக்கிறபடியால், அவைகள் மெத்தச்சின்னவைகளாகக் காணப்படுகின்றன. அதினுடைய கழுத்திலுந் தலையிலும் இறகுகளிருந்தும், சடலத்தின் தோல் வெளியில் தெரியத்தக்க அவ்வளவுமெத்தக் குறைந்ததுமாய் நெருக்கமில்லாமையுமாயிருக்கின்றது. அப்படியிருந்தும, அதின் தலைக்கடிப்புறத்திலுள்ள இறகுகள்சற்றே நீண்டதும் பின்புறத்திலுள்ளவைகள் சற்றே அகலமதாயுமிருக்கின்றன. மயிர்கள் கொட்டுண்ணும்பொழுது செட்டைகள் மூன்றரையடியுயரமுள்ளதும், அதிலுள்ள இறகுகள் அவயவத்திலுள்ள மற்றுமிறகுகளைப்போலவுமிருக்கும். செட்டைநுனியிற்பற்பல விகாப்பமான நீளத்தையுங்கனத்தையுமுடைய விற்போலவளைந்த ஐந்துமுட்களுண்டு. இம்முட்களுக்குள் அடிதொடுத்து நுனியளவும் உடுவைபொருந்தியதாயிருக்கிறதுமன்றி அவைகளுக்குள்ளே ஊனுமுமுண்டு. இம்முட்களுக்குள்

Digitized by Google

ளே அகநீண்டமுட்கள் பதினொரு அங்குலம். அடிமுள்ளு மட்ட அளவில் கால் அங்குலம் அகலமுள்ளது. நுனிமுள்ளிலும் அடிமுள்ளுமெத்த உரத்ததாயிருக்கின்றது. அதினுனி முரிந்துபோனதாயிருக்கிறதுபோலே தோற்றும்.

அதினுடைய தலைமாத்திரமற்றுமதற்குள்ள அவயவங்களிலும் விசேடித்ததாயிருக்கின்றது. அது நிக்குருவியின்றலையைப்போலச் சிறிதாயிருந்தாலும் அதையுற்றுப்பார்ப்பது மெத்தப் பயங்கரமாயிருக்கும். தலையிற் சற்றெனினும் மயிரில்லை. தலையைப்பார்த்தால்க் கொம்பினால் அலங்கரிக்கப்பட்ட தலைச்சீராவையணிந்ததுபோலிருக்கும். அச்சீராவின் முற்புறங் கருமையுள்ளதும், பின்புறங் கருமைநிறமடர்ந்ததுமாயிருக்கின்றது. அதின் கொம்புகள் தலைமண்டையோட்டுடனே சேர்ந்திருக்கிறபடியால், மெத்தவைரங்கொண்டதாயிருக்கின்றது, அது மாட்டுக்கொம்புபோல ஒன்றின்மேலொன்று படைகொண்டிருக்கும். மயிர் நிரம்பிய அதின் தொடையுங் காலுமெத்த உரத்துத்தடித்து நீண்டதும், பற்பலவகையான செதிளடங்கியதாயுமிருக்கும். கால்கள் மற்றுமவயவங்களனைத்திலுஞ் சற்றே தடித்ததாயிருக்கின்றன. பெருவிரல்களின்மூன்று படையான செதிளடர்ந்து நெருங்கியிருக்கும். மிகவைரங்கொண்ட அதின் நகங்களுக்கு வெளிப்புறங் கறுப்பும் உட்புறம் வெள்ளையுமாயிருக்கும்.

இப்பட்சியினுட்புறம் மிகவுங் கவனிக்கப்படத்தக்கதாயிருக்கின்றது. பயிர்பூண்டுவகைகளைத் தின்கிறதும் மச்சத்தைச்சாப்பிடுகிறதுமான இருவகைத்தன்மைகளை இந்தப்பட்சிகொண்டிருக்கின்றது. இதினால் இப்பட்சி ஆண்டவன்படைத்த மற்றெல்லா மிருகங்களிலும் பொலலாததென்று தீர்க்கப் போதிய இடமுண்டு. இப்பட்சியைப்பார்த்தால் அப்படிப்பட்ட தன்மை அதிற்காணும். அது ஒருவரோடெனினும் எதிர்க்கிறதில்லை. ஆராகிலுமதை எதிர்த்தால், காலைநீட்டிக் குதிரையைப்போலுதைந்து எதிர்த்தவனை அடித்துவிழுத்தும்படியோடி அவனைப்பிடித்து நிலத்திற்போட்டு மிதிக்கும். அதினுடையநடை அதின் தோற்றத்தைப்பார்க்கிலுங் குறைந்ததல்ல. அதுவரவர முன்னேறி ஏறிநடக்கிறதற்குப்பதிலாக, ஒருகாலாலே பின்னாக உதைந்துதைத்து மற்றக்காலினாலே முன்னேறி ஏறிச்சென்று அதிக கதியுடன்பாய்ந்துபோகிற பந்தயக்குதிரையிலும் அதிகவிரைவாயோடும்.

இந்தப்பட்சி தன்தொண்டைக்குள்ளே போகத்தக்க எவ்வகைப்பட்ட பதார்த்தங்களையும் பட்சிக்கும். யாவகதேசத்திலுள்ள உலாந்தாக்காரர் சொல்லுகிறபடி இது வீதுருக்களையும், இரும்புகளையும், கற்களையும் பட்சிக்கிறதேயல்லாமல் அனலெழுந்தழலையும் மோசம்வருமென்றஞ்சாமல் எடுத்ததக்கி விழுங்கிவிடும். முட்டையையுமெடுத்து விழுங்கிப் பிறகும் அந்தமாதிரியாய்த்தானே உடைபடாமல் வெளியிற்கக்கிவிடுகின்றது. கொய்யாக்கொட்டைமுதலான விதைவருக்கங்களும் கோதுமைகளும் மனிதனுக்குச் சமியாததுபோல, இப்பட்சி பட்சிக்கிற அநேகபதார்த்தங்களுஞ் சமியாமலத் திருமபவும் அந்தமாதிரியே வெளியேவருகுது.

இப்பட்சியின் முட்டைகள் பச்சைநிறமடர்ந்த சாமபர்வன்னத்துக்குச் சரியாயிருக்கின்றன. அவைகள் நிக்குருவியின் முட்டைகளைப்போல அவ்வளவுபெரிதும் வட்டமுமானவைகளல்ல. அம்முட்டைகளெல்லாம் மிகுந்த பச்சைநிறம நெருங்கிய மொண்டணிகளினால் எங்குமடர்ந்திருக்கின்றன. முட்டையிலோடுகள் மெத்தத்தடிப்பல்ல, யாதொருசனங்களும் ஊடாடாத வனாந்தரவெளிகளிற் சஞ்சரிக்கின்ற நிக்குருவிகள் மிகுவராளமாயிருக்கிறதுமன்றி அந்தந்த இடங்களிலிருந்திராச்சியபரிபாலனம் பண்ணிவருகின்றனவென்றுஞ் சொல்லலாம். ஆனாலுஞ் சனங்களுசாடிச் சஞ்சரிக்கின்ற இடங்களில்த்திரிகிற தழலவிழுங்கியென்னும்பட்சிகள் வரவரக்குறைந்து அற்றுப்போகின்றன. எப்படியெனில், சனங்களெவ்வளவுக்கு வரவர அதிகப்பட்டுப்பலுகிப் பெருகுகிறார்களோ அவ்வளவுக்குதகமாக விலமிருகங்களும் வரவர அற்றுப்பறந்து போகின்றன.

---

மான்காதுகளுனக்குண்டோ? அல்லது உனதுகண்கள் கருடனின கண்களைப் போலத் தூரத்துக்கெட்டிப் பிடிக்கத்தக்கதோ? உனது கந்தம் வேட்டைநாய்போலவோ? குரங்குதன் ரசத்தையும், ஆமைதன் பரிசத்தையும் உனக்குக் கொடுக்கக் கூடுமோ? எப்படியாயினும், உன்னிடத்தற் புத்தியிலலாதிருந்தால் நீயிருந்தென்னபயன்?

## கிறிஸ்துமதப்—CHRISTIAN.

### சங்கீர்த்தனம்.

(*Praise to God.*)

விருத்தம.

தம்பிரானொருமெய்த் தேவசத்தியதிருப்பிதாவே
உம்பரினுரிமைக்கோவே உன்னதத்துயர்ந்தவாழ்வே
நம்பினோர்ஞ்சரணத்தாவே ஞானசங்கீர்தப்பாவே
அம்பராயேகோவாவேயருள் செய் தல்லேலூய்யாவே.

இறைப்பராஇறைப்பராஇறைப்பரமேசரா
கீர்த்தனஞ்சங்கீர்த்தனமிஸ்தோத்திரஞ்சர்வேசுரா.

௧ அருமைப்பிதாச்சுதனரூபி அட்செபத்திரியேகமே
அநந்தசதானந்தருளானந்தப்பிரவாகமே இற

௨ அதிக சவுரியவலமைமகிமைப்பிரதாபியே
அதிசயவிநோதகிருபாசனத்தொராரூபியே இற

௩ பரமதயாபரகருணம்பரவுனதசேசமே
பகரமுடியாதபரிபூரணவிலாசமே இற

௪ உணரவரிதான வுயர்வானதபிதானமே
உருவமிலாதுவமையிலாதொவிர்பரம ஞானமே இற

௫ பரிசுத்தம் நீதிகண்முக்கியபாக்யசத்திய தேவனே,
பரிவுற்றபூரணபக்ஷாபதிநித்திய சீவனே இற

௬ அருள் செய்பரர் வருள் செய்பரா அனந்தசதாகாலமே
அம்பரா ஏகாம்பராகருணம்பராநுலோலமே. இற

---

### RULES FOR THE CONDUCT OF A CHRISTIAN LIFE.

(Abridged from "the practice of True Devotion" by Robert Nelson, Esq.)

*III. Business or calling.*—Take care to discharge all the particular duties of that estate and condition wherein the providence of God has placed you, with justice and industry, and wisely to manage your time, of which you must one day give a strict account.

If you are under a necessity of working for your living, bless God that he has by this means secured you from idleness, the root of all evil, and of what nature so ever your employment is, exercise it with justice and fidelity. If a plentiful fortune has set you above any calling, remember it is your business to manage your estate to the best advantage; to govern your family with prudence and piety; to administer justice diligently and impartially, and to attend to public affairs, with a firm resolution, in all your procedings, to aim at the good and welfare of the church and state. You must not consume your time in impertinent visits, and in trifling conversations, and in continual diversions, or in unaccountable sloth; for mirth and doing nothing was never designed for the business of life. Unhappy is that man whose whole employment is gaming and debauchery, and who studies only for some new diversion.

In whatever condition you are, some employment may be found out, useful either to yourself or your neighbour. And in the labour either of body or mind, prescribe to yourself a distribution of your time, for every thing you have to do every day, and observe exactly the regulation you have pitched upon; by this means time will never lie upon your hands, and you will be delivered from many temptations of offending God.

Before you begin your work, or any other of your actions offer them to God, if you design they should be acceptable to him. "O my God! it is to comply with the order of thy providence, and to obey thy holy will, that I engage in my worldly affairs; make them serviceable to my subsistence and thy glory, and to the salvation of my own soul."

During your work frequently raise up your mind to God,

Digitized by Google

to renew the intention you have of pleasing him; and take care that vanity and curiosity, that self-love, and a regard to men only, or some other evil intention, does not slide into corrupt your actions.

---

௩வது. பேயரிடு.

பராபரனுக்கூப் பராபரிப்புக்காரராய் வைத்த உங்கள் திருவாகத்துக்கும் ஆஸ்திக்கும் உரித்தாயிருக்குங் கடமைகள்யாவையும் நியாயஞ் சுறுசுறுப்பென்றவற்றுடன் செய்துமுடிக்கவும், ஒரே நாளில், நீங்கள் கணக்கொப்புவிக்கவேண்டியதாயிருக்கிற உங்கள் காலத்தை எற்றபிரகாரமாய்ச் செலவழிக்கவுஞ் சுறுசுறுப்புள்ளவர்களாயிருங்கள். நீங்களுங்கள் ஜீவனத்துக்கென்ற வேலைசெய்தால் சகல பொல்லாப்புக்கும் வேராயிருக்கிற சோம்பலை விட்டுவிடுவதற்குப் பராபரன் அவ்வழியாகவே உங்களைத் தப்பவைத்ததற்காக அவரைத் துதியுங்கள். எவ்விதவேலையை நீங்கள் செய்யினும் நீதி நம்பிக்கை என்றவைகளுடன் அதைச் செய்யப்பாருங்கள். யாதொரு உத்தியோகம் வேண்டத்தக்க பிரகாரமாய்ச் செல்விக்கையடைந்திருப்பீர்களேயாகில் அதிக நன்மைக்கென்றுங்களாலிதிலைப் பராபரிப்பதும் புத்தியாயுந் தேவபத்தியுடனுங்கள் சமசாரத்தை நடத்துவதும் உங்கள் தேசத்தவர்களுக்குச் சுறுசுறுப்பாகவும் பாரபட்சமில்லாமலும் நீதியை நடப்பித்துச் சனங்களுடைய வெளிக்காரியங்களைத்திலுஞ், சபைக்குரித்தாயிருந்தாலென்ன அதை நீங்கியிருந்தாலென்ன அவர்கள் நன்மைக்கென்றே அனைத்தையுஞ் செய்வதும் உங்கள் கடமையென்றெண்ணுவீர்களாக. உங்கள் நேரத்தைக்கொண்டு வீண்காரியத்துக்கென்றொருவரைச் சந்திக்கப்போகாமலுங் கெட்ட சமபாஷணைகளைப்பண்ணாமலும், இடைவிடாப்பகிடி பரிகாசத்துக் கிடங்கொடாமலும் சோம்பலுக்குமுங்கள் நேரத்தைச் செலவழியாதிருங்கள். ஏனென்றால் வீண் வேடிக்கைக்கென்றும், வேலையின்மைக்கென்றுஞ் சில காலத்திற் செய்யப்பட வேண்டிய தொழில்களாக ஏற்படுத்தப்படவில்லை. இளைப்பாறும்படி படித்து மற்றுநேரமனைத்திலுஞ் சூதாடுவதிலும மதுக்களிப்பிலும நேரம்போக்குகிற அந்த மனிதன் அபாக்கியன். நீங்களென்ன நிருவாகத்திலிருந்தாலும் உங்களுக்கல்லது உங்கள் அயலகத்தாருக்குப் பிரயோசனமான செய்கைகளைச் செய்யுங்கள். சரீரத்துக்குரிய அல்லது மனதுக்குரிய யாதொரு பணிவிடைகளில், ஒவ்வொருநாளும நீங்கள் செய்யவேண்டிய காரியங்களுக்குங்கள் நேரத்தைக்குறித்துவைத்துக்கொண்டு நீங்கள் குறித்துவைத்த ஒழுங்குகளைச் சரிவரக் கவனியுங்கள். இதுவழியாய் நேரத்தை வீண்போக்காமலும பராபரனுக்கிடறல் வருத்துவிக்காமலுமிருப்பீர்களாக. நீங்கள் உங்கட்குக்குறித்தவேலையை அல்லது வேறியாதொரு வேலையையாயற்றத் தொடங்கமுன்னமே பராபரனுக்கவைகளேற்கவேண்டுமென்று எண்ணினால, அவைகளைப் பராபரனுக்கொப்புவியுங்கள் அப்படி ஒப்புவிக்குமபொழுது ஒவ்வொருவனுஞ் சொல்லவேண்டியதென்னவெனில, ஆ என்பராபரனே, உலககாரியங்களை நான செய்ய ஏற்படுவது உமதுதற்செயலின் ஒழுங்குத்திட்டங்களுக்கேற்குதலாகவும் உமது பரிசுத்தசித்தத்துக்குக் கீழ்ப்படிதலாகவுமிருக்கடும அவை சகலமுமெனது போசனத்துக்கும் ஆத்துமபாடனிப்புக்கும் உமது சோயமகிமைக்கென்றே நூருக்கப்பணண்யருளும.

நீங்கள் வேலைசெய்துகொணடிருக்கையிற் பராபரனைப் பிரியப்படுத்துகிறதற்காகக் கொண்டிருக்கும எணணங்கள் யாவையும் திடனயுங்கள். பேறும், மாய்கையாயும் நூதனமாயும தன்னேசமபிறாமதிப்பு, எனனப்பட்டவைகளை உடையதாயும அலலது யாதாமொரு பொல்லாத எணணங்களை யுடையதாயுமிருக்கினற யாதொன்றுமுங்கள்செய்கைகளைக்கெடுக்கவராதபடிபாருங்கள்.

---

**Scriptural Proofs of the Doctrines and Duties of Christianity.**

CONCERNING THE BEING AND ATTRIBUTES OF GOD.

*God is unsearchable.*

"Touching the Almighty, we *cannot find him out.*" Job. xxxvii. 23.

"How *little* a portion *is heard* of him! the thunder of his power *who can understand?*" Job. xxvi. 14. [cxlv. 3.

"Great is the Lord, his greatness is *unsearchable.*" Psalm.

"How *unsearchable* are his judgments, and his ways past finding out." Rom. xi. 33.

"He doeth great things and *unsearchable*, marvellous things without number." Job. v. 9.

"Canst thou by searching find out God? Canst thou find out the Almighty unto perfection?" Job. xi. 7.

"Unto me, who am less than the least of all saints, is this grace given, that I should preach among the gentiles the *unsearchable* riches of Christ." Eph. iii. 8.

---

பராபரனுடைய இலட்சணத்தையும் தன்மையையும் பற்றிய திருட்டாந்தம்.

௧வது. பராபரனை அளவிடக் கூடாதென்பதைப் பற்றி.

சருவத்துக்கும் வல்லவரை நாம் கண்டு பிடிக்கக்கூடாது. யோப்பு ௩௭. அதி. ௨௩.

அவரைக் குறித்துக் கேட்டவார்த்தை எத்தனை? அவருடைய வல்லமையின் இடிமுழக்கம்இன்னதென்று அறிந்தவன்யாவன்? யோப்பு. ௨௬. ௰௪. [சங்கீ. ௱௪௫. ௩.

கர்த்தர் பெரியவர், அவர் மகத்துவத்துக்கு ஆராயுதலில்லை. சங்

அவருடைய நியாயத்தீர்ப்புக்கள் அளவறுக்கப்படாதவைகள், அவருடைய நெறிகள் ஆராய்ந்து பார்க்கப்படாதவைகளாயிருக்கின்றன. ரோமர், ௰௧. ௩௩.

அவர் ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும் எண்ணிமுடியாத அதிசயங்களையுஞ் செய்கிறார். யோப்பு. ௫. ௯.

பராபரனுடைய அந்தரங்கஞானத்தை நீ கண்டு சருவத்துக்கும் வல்லவருடைய குறையற்ற நியாயமட்டும் எட்டி அதைக்கண்டுபிடிப்பாயோ? யோ. ௰௧. ௭.

கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறத்தேசத்தாரிடத்திற்சுவிசேஷமாயறிவிக்கிறதற்கு அந்தக்கிருபையே எல்லாப் பரிசுத்தவான்களிலுஞ் சிறியவனாகிய எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. எபேசர். ௩. ௮.

---

இரண்டு அவிசுவாசிகள் கூடிக்கொண்டு வேதாகமத்தை ஆராய்ந்து பார்த்ததினால் வந்தபலன்.

[Conversion of lord Littleton, and Gilbert West.]

கல்வித் திறமையில் முதிர்ந்து மேன்மக்கள் வரிசையிற் சார்ந்த மெஸ்தர் லில்டெடுத்து வெயித்து, விற்றில்றன் என்ற இரண்டு அவிசுவாசிகள் வேதாகமத்தைச் சற்றே மேலெழுச்சியாய் வாசித்த காரணத்தினால், வேத வசனம் மனிதரால் உண்டான கட்டென்று மனதிற் கெட்டியாய் எண்ணிக்கொண்டு அவ்வேத வசனங்களிலுள்ள தப்பறைகளை எடுத்து வெளியிற் காட்டும்படி துணிந்து மேற்சொல்லிய வெயித்து என்பவர் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப் பற்றியும், விற்றில்றன் என்பவர் பவுல் ருணப்பட்ட வரலாற்றைப்பற்றியும் ஆராச்சிபுரியத் தலைப்பட்டு இவ்விரண்டுகாரியங்களையுந் தனியே தனியே சோதித்துப் பார்த்து அப்படிச் சோதனை பண்ணினதினால் வரும்பலாபலனையறியத்தெண்டித்துக் கிறிஸ்துமதம் புரளியென்றத்தைத் தலைகீழாகளறித்துப்போட முயன்றார்கள்.

இப்படியே அவர்கள்வேதவசனத்திலொருபகுதியை மற்றப்பகுதியுடனிணையிட்டுப்பார்த்து வேதவசனந்தப்பென்றெண்ணினவேளையில, அவர்களெண்ணினதற்கு மாறாய்வந்துபோயிற்று, அவர்களெவ்வளவு சாக்கிரதையாய் வேதவசனத்தைப்படித்தார்களோ அவ்வளவாக அது அவர்களுக்கு உண்மையானதும் ஒருபகுதியோடே மற்றப்பகுதி சமரசப்பட்டதாயுமிருந்தபடியால, கிறிஸ்துமார்க்கம்புரளியென்று தாங்கள் முன்கொண்ட எண்ணமறியாமையினாலுண்டானதென்று துலாம்பரமாயறிந்து, வேதவசனத்தினுண்மையைக் கவிழ்த்துப்போடுவதற்குப் பதிலாக அவர்களிருவரும் வேதாகமத்துக்குச்சார்பாய் அது தேவனாலளிக்கப்பட்டதென்பதை அத்தாட்சிபண்ணும் பொருட்டு விலையுயர்ப்பெற்ற இரண்டு புத்தகங்களையெழுதி முடித்தார்கள்.

பாருங்கள் வேதாகமம் பொய்யென்றெண்ணுகிறீர்களோ? அத்தைச்சாக்கிரதையுடன் வாசித்து ஒருபங்கை மறுபங்குடன் சமானிக்கத் தெண்டியுங்கள், சுறுசுறுப்பாகவும் முயற்சியாகவும் வேதவசனத்தைப்படியுங்கள் நீங்கள்செய்தபாவமுங்களில்முற்றி வேரூன்றிவிடாதுபோனால் வேதவசனமுண்மையென்றுங்கள் மனதிற்படும்.

Digitized by Google

## பஞ்சதந்திரக் கதை.

மூன்றாவது.

*சந்திவிக்கிரகம், அல்லது அடுத்துக்கெடுத்தல்.*

## PANCHA-TANTRA-KATEI.

*The art of conquering an enemy by means of an affected friendship.*

[Continued from page 20.]

மேலும், கொலை செய்கிற புலி முதலானவற்றைக் கொல்லுகிறவர்களும் நரகத்துக்குப் போகிறார்களென்று சாதுக்கள் சொல்லுகிறார்கள். ஆனாலும், மற்றவர்கள் கொலையினால் நரகம் வருமென்பதிலே ஆச்சரியமென்ன? யாககருமத்திலே பசுவைக் கொல்லுகிறவர்கள் வேதத்திலுள்ள பொருளை அறியாதவர்கள். அந்த விஷயத்திற் சொல்லியிருக்கிறதென்னவென்றால், ஏழு வருடத்தில் நெய்யைக் கொண்டுவந்து ஓமம் பண்ணவேண்டுமென்று சொல்லியிருக்கின்றது. பசுக்களைக் கொன்றும் மரங்களை வெட்டியும் ஓமம்பண்ணிச் சுவர்க்கங்கிடைக்கிறதானால் நரகத்துக்கு ஏன் போகிறார்கள்; ஆதலால் இவையெல்லாம் வஞ்சகர்களுடைய காரியமென்றறிந்திருக்கின்றமையால் உங்களைச் சுத்தமாய்த் தின்னேன்; உங்களுக்கு வழக்கு மாத்திரந் தீர்ப்பேன். ஆனால் நான் கிழவனானபடியாலே தூரத்திற் சொற்கேளாது. ஆகையால் நீங்கள் கிட்டவந்து ஒருவர்க்கொருவர்க்கிருக்கிற வழக்கென்னமோ அதைச் சொன்னாற் கேட்டு இம்மைக்கும் மறுமைக்கும் நலந் தருவதாகிய நடுவு நிலைமையாய்ச் சொல்லுவேன். ஆசையாலாயினுங் கோபத்தாலேனும் அநியாயத் தீர்ப்புச் சொல்லுகிறவன் நரகத்திற்குப்போவான்; ஆதலால், நீங்கள் என் காதின் அருகே வந்து உங்கள் வழக்கைத் தெரிவியுங்களென்ன அவ்வ இப்படிப்பட்ட வார்த்தையினாலே அதனிடத்தில நம்பிக்கை வைத்துக் கிட்டவர, அவற்றைக் கைகளினால் ஒருமிக்கச் சேர்த்துப் பிடித்து வழக்கறவிரண்டையுந் தின்றது. ஆதலால்த் தீயோரைச் சேர்ந்தால் இப்படிக்கொத்த தீங்கு நேரிடுமென்றறிந்து செய்யத்தக்கவெதுவோ அதைச் செய்யவேண்டுமென அப்படிக்காகஞ் சொன்னதைப் பறவைகளெல்லாங் கேட்டு இவன் சொன்னது நன்றென்றெண்ணி ஆனால் இப்பொழுது சேகரித்தபொருள்களை எலலாம் இப்படியே வைத்து மற்றொருவனை அரசனாக்குவதைக் குறித்துப் பின்பெல்லாங் கூடுவோமென்று உறுதி செய்துகொண்டெல்லாந் தந்தமிடத்திற்குப் போயினார்கள். அப்போது சிங்காசனத்தின் அருகே மனையாளோடு கூட உட்கார்ந்திருந்த கோட்டான் தன் பெட்டையைப் பார்த்துப் பெண்ணே, மங்கலஸ்நானமாகியும் இப்போதிராச்சியாபிஷேகம் ஏன் பண்ணாமலிருக்கிறார்களென, பேடு உன் இராச்சியாபிஷேகத்துக்குக் காகம் இடையூறுசெய்தபடியாற் பறவைகளெல்லாந் தங்கள் வீட்டுக்குப்போயின. ஆனாற் காகமாத்திரம் இருக்கிறதென, இதன் வார்த்தையைக் கேட்டுக் கோட்டான் காகத்தை நோக்கி அடா துஷ்டா! நான் உனக்கு என்ன செய்தேனென்று என் காரியத்தைக் கெடுத்தாய்; இதனால் இன்று முதல் உன் குலத்துக்கும் என் குலத்துக்குந் தீராப்பகை இருக்கட்டும்; ஏனெனில், வாளினாலே வெட்டினாலும் பாணத்தினால எய்தாலும் அச்சயமாகிக் குணப்படுஞ் சொல்லின் காயமப்படி ஆறுதென்று சொல்லிவிட்டுத் தன் பெட்டையோடு கூடத் தனனிடத்துக்குப் போயிற்று. பின்னர், காகம் மனதிற் நினைப்பட்டு துணை தன்வாயாற்கெடுமென்பதுபோலிந்தப் பேச்சைச் சொல்லி நான் வீண்பகை சம்பாதித்தேன், சமர்த்தனாயிருக்கிறவன் சபையிற் பிறரை நிந்திக்கலாகாது. மேலும் யாதொன்று செய்வதை மனங் கலந்த நட்டோரையுசாவிச் செய்யவேண்டும் அப்படிச் செய்யாமல இப்போது சங்கடத்தில் அகப்பட்டேனென்றிப்படிப்பச்சாத்தாபப்பட்டு அவனுந் தன்வீட்டிற்குப் போயினன். அதுமுதற்கொண்டு கோட்டானுக்கும் நமக்கும் பகை தலைமுறைதலைமுறையாக விடாமற் தொடர்ந்து வருகிறதென்ன?—இப்படிக் கிழமந்திரியின் மொழியைக்கேட்டு மேகவர்ண இராசன் மறுபடியும அதைப் பார்த்து, ஐயா! இப்போதென்ன செய்யலாமென, அவன் பார்ப்பானிடத்தில இருந்தாட்டைச் சில வஞ்சகர்கள் எப்படி வஞ்சித்துக் கொண்டுபோனார்களோ அப்படி நாடிக் கோட்டானிடத்திற்குப்போய் அவர்களை வஞ்சனைபண்ணிக்கொல்லுகிறேனென, அதைக் கேட்டு இராசன் அவர்கள் ஆட்டை எப்படிக்கொண்டுபோனார்கள் சொல்லுமென மந்திரி சொல்லுகிறான். [இன்னும் வரும்.]

### சா. அதிகாரம்.

வாழ்க்கைத் துணைநலம்.

*ருஎ. சிறைகாக்குங்காப்பெவன் செய்யுமகளிர்*
*நிறைகாக்குங்காப்பேதலை.*

பு. மாதராகிய மனைவியரைக் கணவர்செய்த மதிலும் வாயில்காவலுமுதலாகிய சிறையினாலே காக்குங் காவலானது என்ன பயனைச் செய்யும்? அந்த மனைவியர் தங்களுடைய கற்பிலே மனத்தை நிறுத்துவதாகிய நிறையினாலே தங்களைக் காக்குங்காவலே தலைமையாகிய காவல்.

What avails the guard of a prison? The chief guard of woman is her chastity. *Drew.*

---

*ருஅ. பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்*
*புத்தேளிர் வாழுமுலகு.*

பு. மனைவியராகிய பெண்டுகள் தம்மை அடைந்த கணவனை வணங்குவது பெறுவாரானால், தேவர்கள் வாழ்கின்ற உலகத்திலே அவராலே பெருஞ் சிறப்புப்பெறுவர். பெரிய மேன்மைப்பாடாகிய சிறப்பைப் பெற்றுக்கொள்வார்.

If women shew reverence to their husbands they will obtain great excellence in the world where the gods flourish. *Drew.*

Woman all happiness from wedded love
Derive, and by it blessed, forestate on earth
The joys of heaven. *Ellis.*

---

### மாசி மீ.

சாதி மீ. மாசி கதி. முதல் மாசி யருதி வரைக்கும்.

| E. Date. | தமிழ்த் தேதி. | வாரம். | நட்சத்திரம். | | திதி. | | யோகம். | | கரணம். | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | க | ச | தி | ௩கூ\|\|\| | ஏ | ௩ | வி | சா\|\|\| | வி | ௩ |
| 12 | உ | ஞா | பு | ௩ரு\|\| | து | \|\|\| | பி | [illegible] | பா | \|\|\| |
| | | | | | தி | ருகூ\|\| | ஆ | ருசா\|\| | கவு | உஅ\| |
| 13 | ௩ | தி | பூ | ௩௩\|\| | ச | ரு௩\|\| | சவு | சஅ\| | கர | உரு\|\| |
| 14 | ச | செ | ஆ | ௩ய\|\| | 0 | சஅ\|\| | சோ | சக\| | வி | உக |
| 15 | ரு | பு | ம | உஎ\| | பி | சக\|\| | அ | ௩ச | பா | ய௩ |
| 16 | சா | வி | ஈ | உ௩\| | து | ௩எ\|\| | அ | உகூ\|\| | தை | ய\|\| |
| 17 | எ | வெ | உ | யக\| | தி | ௩க\|\|\| | தி | யஅ\|\|\| | வ | சா\|\|\| |
| | | | | | | | | | வி | உஎ |
| 18 | அ | ச | அ | யரு | ச | உகூ | ஞ | யக | பா | உக |
| 19 | கூ | ஞா | ஹ | யக\| | ப | உய\| | க | ௩\| | தை | உய\| |
| | | | | | | | வி | ருஉ\|\|\| | | |
| 20 | ய | தி | சு | எ\|\|\| | ஷ | யரு\| | து | சக\| | வ | யரு\| |
| 21 | யக | செ | பீ | ரு | ஸ | ய\|\|\| | வீ | சக | ப | ய\|\|\| |
| 22 | யஉ | பு | அ | உ\|\|\| | அ | எ | அ | ௩எ\| | கவு | எ |
| 23 | ய௩ | வி | கே | க\|\|\| | ச | சா\| | வ | ௩உ\|\| | க | சா |
| 24 | யச | வெ | மூ | ச\| | த | கூ\|\| | வி | உஅ\|\|\| | வி | க\|\| |
| 25 | யரு | ச | பூ | உ\|\| | ஏ | அ\|\|\| | வி | ௩ச | பா | உ |

Digitized by Google

# SUPPLEMENT TO THE உதயதாரகை.—MORNING STAR.

புத். சஞ்சிகை ௩.] சோபகிருது ௵. மாசி. ௯, தேதி வியாழக்கிழமை, Thursday, February 9, 1843. [Vol. III. No. 3.


***Remarks on the pretended Resemblance between the rites and ceremonies of the Mosaic dispensation and those of the Sivas, being a Reply to the communication in the last No. of the Star on this subject.***

In offering a reply to the communication of "A Lover of good Religion" on the *points of resemblance between the rites of the Jews under the Mosaic dispensation and those of the Sivas in this country* (which was published in our last) we shall first notice the principal points of inquiry presented by our correspondent, and then offer some general remarks in illustration of our views on the subject in question. As the subject is one of great interest and importance to all classes in this country, we hope our readers will give close and patient attention to the remarks we shall offer, though they be protracted to considerable length.

We believe there are a great many individuals in this country who stand in the precise position of our correspondent, and entertaining similar views with regard to the probable falsity of Sivaism and the probable truth of Christianity, are yet deterred from renouncing the former and embracing the latter, by the plausible but unfounded objection, that Christianity is as inconsistent in its various parts, and as difficult to be understood as Sivaism is. We assure our readers that it is not so—and that to the *humble* and *candid inquirer,* instead of presenting a doubtful and forbidding aspect, as if it were the "country of the jackal" and tiger—it rather presents "ways of pleasantness and peace," as thousands can testify from experience. Many an opponent of Christianity has sat down to the study of the Bible with a firm belief that he should bring forth objections powerful enough to overthrow its adherents, and in the progress of his examination and study has become convinced of his erroneous opposition, and been converted to the faith he once despised. There is an interesting article in this No. of our paper, page 31, illustrating the truth of this remark.

We hope therefore, our readers will ponder the subject, *not as opponents,* but as *inquirers,* and if they will duly consider what we have to offer, we shall be much mistaken, if they do not obtain a new and better understanding of the matter before we get through with it.

We will now turn our attention to the principal points of inquiry presented by our correspondent.

1. After enumerating various particulars, respecting the building of the Tabernacle in the wilderness, and the splendid religious rites and ceremonies, appointed by God to be observed by the children of Israel, he says "in reference to these things, I do not understand what is the difference between the rites and ceremonies of the *Sivas* and those of the *Israelites.*"

2. He states that the rites and ceremonies, appointed by God for the purposes of "purification," are very similar to those contained in the "Lamp of Purification," and other standard books of the Sivas

To have a full view of these two points for the sake of comparison, we should attentively read the two books of Exodus and Leviticus, and compare their contents with what we read in the Shasters of the Sivas and with what we witness at the festivals at Nellore, Madura or Juggernaut. On doing this we shall find, that although some of the religious *rites* and *ceremonies* of the Sivas are, in their *form,* as if they were *copied* from those instituted by Moses under the divine direction, yet in their *grand object* and *fundamental principles* they are TOTALLY DIFFERENT.

The *grand object* and *fundamental principles* of *the Mosaic dispensation* were, to *teach the unity of God,* the *perfections of his nature,* and that *he alone is to be worshipped by his creatures;* also to PRESERVE the people from *polytheism* and *idolatry.* That this was the grand object of the Mosaic dispensation, must be manifest to every attentive reader of the Pentateuch. In elucidation of this point, we refer first, to the terrific scene on Mount Sinai, in the presence of more than two millions of trembling and affrighted witnesses at the giving of the decalogue. Then it was, that the supreme Being of the universe condescended to proclaim from the midst of the flaming mount, "*I am the Lord thy God*"—"Thou shalt have no other Gods before me."

We next refer to the vengeance of the Almighty, executed upon those who were guilty of the sin of idolatry, in connexion with the golden calf. See Ex. 32d. chapter throughout. It was for the abomination of their *idolatries,* that the Lord rooted out the *seven great nations* from the land of Canaan, and gave the land to his own people, Israel, for an inheritance. See Deuteronomy vii. 1-20, xviii. 9-14, and xx. 10-18.—Concerning this sin of idolatry, the Lord himself proclaimed in the ears of his people by the mouth of a prophet, "Oh do not this abominable thing that I hate!" Jeremiah xliv. 4.

Further to shew how abominable this sin is, in his sight, and that it was one grand design of the Mosaic Law to guard the Israelites against it, we refer to that remarkable statute recorded in Deut. xiii. 6-11, "If thy brother, the son of thy mother, or thy son, or thy daughter, or the wife of thy bosom, or thy friend which is as thine own soul, entice thee, secretly saying, let us go and serve other gods which thou hast not known, thou nor thy fathers; namely, of the gods of the people which are round about you, nigh unto thee, or far off from thee, from the one end of the earth, even unto the other end of the earth, thou shalt not consent unto him, nor hearken unto him; neither shall thine eye pity him, neither shalt thou conceal him. But thou shalt surely kill him; thine hand shall be first upon him to put him to death, and afterwards the hand of all the people. And thou shalt stone him with stones, that he die; because he hath sought to thrust thee away from the Lord thy God, which brought thee out of the land of Egypt from the house of bondage. And all Israel shall hear, and fear, and shall do no more any such wickedness as this is among you."

There is nothing in either the doctrines or practices of the Sivas that we have ever seen or heard of, that bears any analogy to the above sentiments uttered under the Mosaic dispensation against idolatry. On the contrary, the experience of every age of its history so far as it is known, testifies that the *Siva System* originates and upholds idolatry.

Here then is a *wide difference,—a total opposition* between the object and principles of the Mosaic dispensation and those of the Sivas:—the one is a practical system of *polytheism* and *idolatry*; the whole design and tendency of the other is to exclude and overthrow idolatry. It is therefore manifest that Judaism and Sivaism are diametrically opposed to each other in their grand object and fundamental principles, and must, necessarily, to the extent of their influence, be destructive the one of the other. It is also shewn by the remarks and quotations we have made on the subject, how entirely unfounded is the claim to any essential agreement between the laws and institutions of Moses and those of the Sivas on the ground of a general resemblance in some of the forms and ceremonies of their worship.

In our next we propose to shew a further difference between the laws and institutions of Moses and those of the Sivas in respect to their *origin* and *specific design.* (To be continued.)

## கவனிப்பு.

யூதருடையவுஞ் சைவசமயத்தவர்களுடையவுஞ் சடங்கு வியாய ப்பிரமாணங்கள் ஒன்றுக்கொன்றொற்றுமையென்பதைப் பற்றிச் "சைவன் குமாரமல நன்மதாபேட்சன்" என்பவருடைய கடிதத்து க்குத்தரஞ் சொல்லுமுன்னே அவர் கடிதத்தில் அடங்கின பிரதா ன விஷயங்கள் இன்னதெனக் குறித்துக்கொண்டு பிறகு நாம் இரு திறத்தவர்களும் பார்க்கவேண்டிய விசேஷத்தைப் பற்றி நாம் கொண்டிருக்கும் அபிப்பிராயம் இன்னதெனத் தெரிவிக்கும்பொரு ட்டுச் சில சாதாரணமான கவனிப்புகளைப் பண்ணுவோமாக.

இந்தகாரியம் இவ்வூரிலுள்ள எல்லார்க்கும் மிகுந்த உபயோக த்தை விளைவிக்கத் தகுதியுடைத்தாதலால் நாம் பண்ணுங்

Digitized by Google

கவனிப்புகள் மிக நீண்டதாயிருந்தாலும் அவைகளைப் பற்றி வாசிப்பவர்கள் தங்கள் முழுக் கவனத்தையுஞ் செலுத்துவார்களென்று நம்பியிருக்கிறோம். இன்னும் "சைவன் குமாரன் நன்மதாபேட்சன்" இப்பொழுது நிற்கும் நிலையில் அநேகம்பேர் இன்று ஒருவேளை சைவ சமயம் பொய்யென்றும், ஒருவேளை கிறிஸ்து சமயம் மெய்யென்றும் எண்ணிக்கொண்டாலும் இன்னும் அவர்கள் கிறிஸ்துமார்க்கத்திலுள்ளவைகள் ஒன்றுக்கொன்றேற்றமைப்பாடின்றி இருக்கின்றனவென்றுஞ், சைவசமயத்தைப்போல விளங்கிக்கொள்ளக்கூடாதென்றும் எண்ணி வீண் சாட்டுகளைப்பண்ணிச் சிவ மதத்தைத் தள்ளவும் கிறிஸ்து மதத்தைத் தழுவவும் பிரியமில்லாதேபோகிறார்கள். அது அவர்கள் எண்ணுகிறபடி போகாது. அது நரியும் புலியும் இருக்கப்பட்ட ஊரைப் போலச் சமுச்சயமுள்ளதும் இதங்கெட்டதுமான பார்வையைக்கொடுக்கவேமாட்டாது. அது திறந்த மனத்தையுடைய கபடமில்லாத ஒருவனுக்குச் சந்தோஷ சமாதான வழிகளையே காட்டும். அதற்குதாரணமாக, கிறிஸ்து சமயத்தை வெறுத்த அநேகமாயிரம் பகைஞர் வேத வசனம் பிழையென்றெண்ணி அத்தைத் தலைகீழாக எறிந்துபோடுதற்கேற்ற நியாயங்களை எழுதி எழுதிப் போகக் கொள்ளத் தாங்கள் கிறிஸ்து மதத்தைப் பற்றி எண்ணின எண்ணம் முழு மோசமெனக் கண்டுணர்ந்து தாங்கள் முன் எண்ணியிருந்த எண்ணத்தை விட்டுக் குணப்பட்டிருக்கிறார்கள். இது காரியத்தைப்பற்றி இந்தச் சஞ்சிகை ௩௨ம் புறத்திலே வெகு கீர்த்தியான காரியம் ஒன்று பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கின்றபடியால் அத்தை வாசிப்பவர்கள் சந்தேகருத் தனமாயல்ல உண்மையை நாடித்தேடி அடைய விரும்பும் மித்துருத் தன்மையாய் ஒவ்வொரு காரியத்தையும் பற்றி உய்த்துணர்ந்து நன் மனத்துடனே கவனிப்பதுண்டானால், நாம் எடுத்துப்பார்க்கவேண்டிய காரியம் முடியுமுன்னே அவர்களுக்கு முன்னிருந்ததிலும் நல்லறிவு கிடையாமற்போகாதென்பது சத்தியம். இதை விட்டுச் "சைவன் குமாரன் நன்மதாபேட்சன்" என்பவருடைய கடிதத்திற்காணலான விசாரணையிற் பிரதான விசேஷத்தைப் பற்றி எடுத்துப்பார்ப்போமாக.

முதலாவது, வனாந்தரத்திலே கூடாரங் கட்டினதைப்பற்றியும், இஸ்ரவேற்பிள்ளைகள் ஆசரிக்கும்பொருட்டுப் பராபரனால் நிருபித்த மதாசாரக் கிரமங்களைப்பற்றியும் பற்பல விசேஷங்களைச் சைவன் குமாரன் தொகுத்துக் காட்டினதின் பிறகு "இக்கிரியைகளுக்கும் இப்போ சைவர்செய்கிற தேவாராதனைக்கும் வித்தியாசமென்னவென்றெனக்கு விளங்கவில்லை" என்றும்,

இரண்டாவது, "சைவருடைய ஆசார தீபிகை பிராயச்சித்த சமுச்சய முதலான வேதாகமங்களை அமைந்தவர்கள் பராபரனுடைய புத்திரராகிய இஸ்ரவேற்சனங்களுக்குள் முற்காலத்திலிருந்த சடங்குகளிக்காலத்துச் சைவருடைய சடங்குக் கொப்பாயிருந்தனவென்று பகுத்தறிவார்கள்" என்றுஞ் சொல்லுகிறார்.

இவ்விரண்டு விசேடங்களையும் ஒன்றன்பின்னொன்றாய் நிறுத்திவைத்துப் பார்க்கும்பொருட்டு மோசே எழுதின இரண்டாமாகமத்தையும் நாலாமாகமத்தையுங் கவனமாய் வாசித்து அதைச் சைவசமயிகளுடைய புராணாகம சாஸ்திர நூல்முறைகளிற் கூறியிருக்கும் விசேஷங்களையும் அத்தோடேகூட நல்லைநகரிலும், மதுராபுரியிலும், சகநாத புரத்திலும் உச்சவதனங்களில நடக்குங்காட்சிகளையுஞ் சமன்செய்துசீர்தூக்கிப் பார்க்கவேண்டியது. அப்படிப் பார்க்கும்பொழுது சிவசமயத்தார்கள் அநுசரித்துவரும் மதாசாரக் கிரமங்களும் முறைகளும் மாதிரியிலே தேவ நியமப்படி மோசேயைக்கொண்டு ஸ்தாபித்த ஒழுங்குமுறைகளுக்குச் சரியாயிருந்தாலும் அதினுடைய முழு நோக்கத்தையும் முக்கிய நிலையையும் பார்த்தால் அது முழுதும் விகாதமாயிருக்கின்றது.

மோசே கொடுத்த பிரமாணங்களுடைய முக்கியமான நோக்கமும் மூலாதாரமுமென்னவெனில், பராபரனொருவரென்பதைப்பற்றி உணர்த்தும்பொருட்டும் அவருடைய இலட்சணங்களைப் பற்றி எமக்கறிவுகொளுத்தும்பொருட்டும் அவர் மாத்திரமே சகலபிராணிகளாலுந் துத்தியம் பண்ணப்படத்தக்கவரென்பதைப்பற்றி எங்களுக்குணர்த்தும்பொருட்டும் பல தேவாநுசாரத்துக்கும் விக்கிரக வணக்கத்துக்குஞ் சனங்கள் போகாதபடி மறித்துத் தடுக்கும்பொருட்டுமேயன்றிப் பின்னொரு பிறநோக்கத்துக்காகவுமல்லவென்பது திருஷ்டாந்தம். மோசே நியாயப்பிரமாண விதிகளை விதித்த நோக்கம் இதுதானென்று மோசே எழுதின பஞ்சாகமங்களையும் கவனமாய் வாசித்துணர்ந்தவர்களுக்குத் துலாம்பரமாய்த் தெரியும்.

இது காரியத்தை விளக்கும்பொருட்டு முற்காலத்திலே பத்துக் கற்பனை கொடுத்தபோது, பயத்தினாலும் திகிலினாலும் நிரப்பப்பட்டிருந்த (மும்பின்னூக) இருபதிலட்சஞ் சனங்கள் முகதாவிலே பருவதத்தில் நடந்த பயங்கரமான காட்சியின்னதென்று முன்முதல நாங்கள் பார்த்தால் அண்டகடாகங்களையுஞ் சிருட்டித்தவர் அக்கினிகாலுங் குன்றின்நடுவில் இருந்து உன் பராபரனாகிய கர்த்தர் நாமே—நமக்கு முன்பாக உனக்கு வேறு தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம் என்றார். இன்னும் பத்துக் கற்பனையில் இரண்டாவதோடடுத்திருக்கிற தீர்மானத்தை முறையாய்ப்படி உய்த்துணர்ந்தால் இவ்வூரிலே பல தேவர்களை நமஸ்கரித்து விக்கிரக வணக்கத்துக்கமைந்து தொழுகிற ஒவ்வொரு பிதாவையுஞ் சத்தியமாகவே அது ஏங்கித் திகிலடையப்பண்ணும். அதாவது, உன் பராபரனாகிய கர்த்தராயிருக்கிற நாம் எரிச்சலுள்ள தேவனாயிருந்து நம்மைப் பகைக்கிறவர்களுக்கோவென்றால் பிதாக்களுடைய அநியாயத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றும் நாலாந் தலைமுறை மட்டும விசாரிக்கிறவராயிருக்கிறோம் ஆனால் நம்மைச் சிநேகித்து நமமுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு ஆயிரந் தலைமுறைமட்டுந் தயவு செய்கிறவராயிருக்கிறோம் என்றார்.

பொற்கன்றுக்குட்டியை வைத்து வணங்கினதினால் வந்த பாவத்தின் நிமித்தங் குற்றவாளிகளானவர்களுக்குப் பராபரனால் வந்த ஆக்கினையைப் பற்றி அறியவேண்டுகில், மோசே எழுதின இரண்டாமாகமம் முப்பத்திரண்டாம் அதிகாரம் முழுவதையும் வாசித்துப்பார். இன்னும் விக்கிரகாராதனையின் அக்கிரமத்தினிலேதானே ஆண்டவன் கானான் நகரில் இருந்த ஏழு பெரியசாதிகளையும் அவ்வூரில் இல்லாதபடி வேரறுத்து அந்தத் தேசத்தைத் தனது சனங்களாகிய பிள்ளைகளுக்கு ஆட்சியாகக் கையளித்தார். மோசே எழுதின ௫. ஆகமம், ௭. அதி. ௧.—௨௬. வசனங்களையும்; ௰௨. அதி. ௬.—௰௪. வசனங்களையும்; ௨௰. அதி. ௰—௰௮. வசனங்களையும் பார். இன்னும் விக்கிரக வணக்கத்தைக் குறித்துக் கர்த்தர் தீர்க்கதரிசி ஒருவரைக்கொண்டு தமது சனங்களின் காதிலே கூறுவித்ததாவது, "நாம் பகைக்கிற இந்த அருவருப்பான காரியத்தைச் செய்யாதேயுங்கள்." எரேமியா. ௪௪. ௪. இன்னும் விக்கிரகாராதனை பராபரனுக்கு முன்பாக எவ்வளவு அருவருப்புள்ளதென்பதைத் தெரியக்காட்டும்படிக்கும், அதிலே இருந்துதானே இஸ்ரவேற் பிள்ளைகளும் விலகிக்கொள்ளும்படி மோசேயும் பிரமாணத்தைக் கொடுத்தாரென்பதை விளக்கும்படிக்கும், மோசே எழுதின ஐந்தாம் ஆகமம், ௰௩. அதி. ௬. வசனந் தொடங்கி ௰௧. வசனமட்டுக்கும பார். அதாவது உங்களைச் சுற்றிலும உனக்குச் சமீபத்திலாகிலும உனக்குத் தூரத்திலாகிலும தேசத்தின் ஒரு முனைதுவக்கிமறுமுனைமட்டுமுள்ள வெளிடத்திலாகிலும இருக்கிற சனங்களுடைய தேவர்களிலே நீயும் உன் பிதாக்களுமறியாதவையதொரு அன்னிய தேவர்களைப் போய்ச் சேவிப்போம் வாருங்கள் என்று உன தாய்க்குப் பிறந்த உன் சகோதரனாகிலும் உன் குமாரனாகிலும் உன் குமாரத்தியாகிலும் உன் மடியிலிருக்கிற உன பெண்சாதியாகிலும உன் பிராணனைப்போலிருக்கிற உன் சிநேகிதனாகிலும் இரகசியமாய்ச் சொல்லி உன்னைக் கெஞ்சிவிட்டால், நீ அவனுக்குச் சம்மதிக்காமலும் அவனுக்குச் செவிகொடாமலும் அவனைத் தப்பவிடவும் அல்லது அவனை ஒளிக்கவும் உன் கண் அவனைப் பாராமலும அவனைக் கொல்லவே கொல்லக் கடவாய். அவனைக் கொலைசெய்கிறதற்கு முந்தி உன் கையும் பிறகு எல்லாச் சனத்தின் கையும அவன் மேல இருக்கக்கடவது. அடிமைத்தன வீடாகிய எகிப்துத் தேசத்திலிருந்து உன்னைப் புறப்படப்பண்ணின உன் பராபரனாகிய கர்த்தரை விட்டு விலகுகிறதற்கு அவன் உன்னை ஏவப்பார்த்தபடியினாலே அவன் சாகும்படிக்கவனைக் கல்லெறியக்கடவாய். இஸ்ரவேலெல்லாங் கேட்டுப் பயந்து இனி உன் நடுவே ஒருவரும் இப்படிக்கொத்த பொல்லாத காரியத்தைச் செய்யாதிருக்கிறதற்காகத்தானே.

சுரூபாராதனைக்கு விரோதமாக மோசே என்பவர் நிருபித்த பிரமாணங்களுக்கு ஒப்புமையாக இருக்கப்பட்ட யாதொரு போதனையையெனகிலுஞ் செய்கைக்குரித்தான யாதொரு காரியங்களையாகிலுஞ் சைவசமயத்தில நாம காணவுமில்லை, இருக்குதென்று கேள்விப்படவுமில்லை. உதாரணமாக, விக்கிரக வணக்கத்தைப்பற்றி ஒவ்வொரு காலத்தில் நடந்த சரித்திரங்களும் சிவ மதமானது விக்கிரகாராதனையை நிலைநிறுத்தும்பொருட்டென்றே முளைத்தெழும்பினதென்றே சாட்சிபகருகின்றது. இதைவிட, மோசே கொடுத்தபிரமாணங்களுடைய முக்கியமான நோக்கத்துக்கும் முதற் காரணத்துக்குஞ் சிவ சமயமூலாதாரத்துக்கும் நடக்கைக்குமமிகுந்த பேதமிருக்கின்றதே. சைவசமயமானது பலதேவாநுசாரத்திலும் விக்கிரகவணக்கத்திலுங் கட்டுப்பட்டதாயிருக்கின்றது. மோசேயி

Digitized by Google

தித்தபிரமாணத்தின் நோக்கமென்னவெனில், விக்கிரகாராதனையை விலக்கித்தள்ளவும் அதைத் தலைகீழாக எறியும்படிக்கேயல்லாமல் மற்றும்படியல்ல. ஆகையால் பூதர்சமயமும் சிவசமயமும் ஒன்றுக்கொன்று அதனதன் மூலாதாரங்களுக்கும் அப்பியாசத்துக்கும்பகைமுற்றினதாயிருக்கின்றமையால் அவ்விரண்டும் ஒன்றையொன்றுந்தாலல்லவோ ஒன்று பிரபலியப்பட்டொழுகும்.

நாங்கள் பண்ணின கவனிப்புகளைக்கொண்டு மோசே விதித்த ஒழுக்குப்பிரமாணங்களும் சிவசமயசாஸ்திரநூல்களிற் கூறியிருக்கும் அரிச்சனைமுறைகளும் ஒன்றுக்கொன்று தோற்றத்துக்கொத்த தன்மைபோலக் காணப்பட்டாலும் அதின் அபிப்பிராயத்தையுற்றுணர்ந்துபார்த்தால் ஒன்றுக்கொன்று சற்றேனிலும் ஒப்புமையில்லையென்று தெளிவுறத்தோற்றுவிக்கும். இதைவிட இதற்கடுத்த சஞ்சிகையிலே மோசே நிருபித்தபிரமாணங்களுக்குஞ் சிவமதப்பிரமாணச் சடங்குமுறைகள் தோற்றிய நோக்கத்துக்குமுள்ள வித்தியாசத்தை எடுத்துப்பார்ப்போமாக. (இன்னும்வரும்.)

Errors in the Edition of Negandu printed at Madras, illustrated by quotations from classical writings.

சென்னை பட்டினத்தில் அச்சுப்பிரதியான சூடாமணி நிகண்டில் உவது. ககம். பக்கம் ௫ம். செய்யுள் "இருபிறப்பாளா பார்ப்பாரேற்றமேற்குலருயர்ந்தோர்" என்றது இருபிறப்பாளர்பார்ப்பார் பனவர் மேற்குலருயர்ந்தோர் என்றிருத்தல்வேண்டும். உதாரணம் பேரியபுராணம் இயற்பகைநாயனார்கதையில் "பாடவமுரைப்பதன்றன்மனைவியைப்பனவற்கீந்தோ" என்று கூறப்பட்டிருக்கின்றது. இன்னும் ௧கம் பக்கம் (எக)ஞ் செய்யுள் "பேதமிலவல்பின்னை அநுசனே கனிட்டன்பின்னோன்" என்றது "பேதமிளவல்சேடனநுசனே கனிட்டன்பின்னோன்" என்றிருத்தல் வேண்டும். உதாரணம் புலியூரந்தாதி "சேடனென்றேதியசெவ்வேணடுவொற்றுச்சேர்க்குமவன் —சேடனென்றோர் புகழ் தென்புலியூரினன்றெய்வதவி— சேடனென்றேமறப்பாள் பதிமீதுமதேர்பசடல்குற்— சேடனென்றேவெற் கருடரும் காணுக் திகிரியின்னே" எவது. ௭ககம் பக்கம் (க)ம் செய்யுள். "பரிதியே வலயமஃதும் பரிவெட்டமாளி-திருமிகுதிகிரியென்றுசெப்பியவேமுமாமே" என்றது "திருமிகுதிகிரியோங்குதரிசனமென்முமாமே" என்றிருத்தல்வேண்டும். உதாரணம் சேதுப்புராணம் சக்கரதீர்த்தச் சருக்கம் உகஞ். செய்யுள் அயிலுவான்பற்றலோடுமருந்தவனினைந்துமாலை - வெயிலதாய்க்களகண்சேவிலெனக்கருனென்றினைந்தாலந்துயிலராப்பள்ளிவள்ளல் சுதரிசனத்தை விட்டான்-வெயிலவன் வழுவிப் பார்மேல் வீழ்ந்தெனமேவிற்றங்கண்," இன்னும்(எ)ம் செய்யுள் "அயில்சத்திபெஃகளுரங்கருடம்பிடியைந்தும்வேலாம" என்றது "அயில்சத்திபெஃகளுரங்கருடம் பிடிகுந்தம்வேலாம்" என்றிருத்தல்வேண்டும். உதாரணம் கல்வளையந்தாதி "தரைக்குந்திக்குக்கள்வாயங்காந்து தயங்கியமக்-தலரக்குந்தவானி தவாக்குமால்பணிதற்பாசவைடக்-தரைக்குந்தனக்கஞ்சமான் மழுங் கல்வளைதங்கிய கா—தரைக்குந்தன முன்னவரைப் பாடலாற்கொள்வர் சங்கத்தரே." அவது. ௭ககம் பக்கம் யகம். செய்யுள் "கூறியவெலவலயின் போகொற்றம்மவரைப்புக்காட்டை" என்றது "கூறியவெல்லையின்பேர்கொத்தம்மவரைப்புக்காட்டை" என்றிருத்தலவேண்டும். உதாரணம, பாரதம் பெருமான் தூதுச்சருக்கம "எத்தனை தரணிவேந்தர் யாகலவிலையில வந்தா— அத்தனைபேரில யாமுமொருவராயடங்கிநிங்ரும்— கொத்தனையுகமுகளிர்க்குருகுலக்கோமானை-மூத்தனையறிப்பின்னர் யாரையமுதன்மை செய்தார்" எனவருமிலக்கியங்களாற் காண்க.

௧௮௫௫. மார்கழி மீ. ௧௰. நுப்பசக்கு
வலவிடடித்துறை ஏகாம்பரமவர்கள் மாணக்கய
ஆறுமுகம அருணசலம்.

On Tamil Grammar.

குருபதந்துணை.

விண்டலகோளத்தின மண்டலகோளத்தும்
உதயதாரகைவிடும் இதயதாரகவதிபரே,

சதுரகராதி வாழ்த்துமாலையின் ஓர்கவியிலுள்ள சந்தேகக்குறித்து யாழ்ப்பாணமாணுக்கன் விருவியவினவை முன்னிட்டு முருகசா சந்திரசேகரருக்கும், கந்தர் ஆறுமுகவருக்கும் உண்டான தருக்கத்தின்மேல் புத்திபட்சமாய் மத்தியட்சமாய்ப் பேதியாது ந்தபேசிக்காட்டும்படி சாட்டும்படி நாட்டும்படி நீட்டும்படி, யாழ்ப்பாணமாணுக்கன். ௰கம் சஞ்சிகையில், ஒதிவாகரமு முரிசொலும் என வரைந்ததுதப்பு, அதைச் சந்திரசேகரர், உ௰ம். சஞ்சிகையில், ஒதிவாகரம் முரிச்சொலும், எனத்திருத்தித் தனைபிரித்திருப்பது நிச்சயமாய் உண்மையும், நுண்மையும், வண்மையும், திண்மையுமாயிருக்கின்றது. அப்பால் சந்திரசேகரர் சதுரகராதி வாழ்த்துமாலையிற்றொனியுள்ள சில கவிகளைப்பற்றிச் செய்த ஆராய்ச்சிகளின்மேல ஆறுமுகவர், பன்னிரண்டு தொகுதிபாராமல், என்பது, பிழைய்யா கண்டிலம் கண்டிலம் என்பது ஒருபடிசரிக்கட்டவுங்கூடும். ஆயினும் விவரங்காட்டாமல் வெறும்புறத்திலே பேசினதினால் அறிந்துபேசினுரென்பதற்கிடமில்லை. அது சரிக்கட்டும்படி எப்படியெனில், பன்னிரண்டுதொகுதிபாராமல், பன்னி, என்று நிறுத்தித் தேமாஎனவும், ரண்டுதொகுதி என்பதைத் தனைகெடவரினே மெல்லுடலிடையுடல் கலவதுகடன், என்னும் விதியினால், ணகரவொற்றைக்களைந்து, ரடுதொகுதிஎன்று நிறுத்தி, கருவிளங்காய் எனவுங்கொண்டாற் சரிக்கட்டும். பாவலர்க்குமாவலுறப் பாடப்பிரசங்கிக்க, என்பதற்குத் தனைபிரித்ததில் வெண்பாவிற் கவித்தலைவருமென்றுஒப்புக்கொண்டு சொற்பகாரியத்தில் மோசம்போனது பெரிய ஆச்சரியம். இனி அதற்குச்சரிவரத் தனைபிரிப்பதெப்படியெனில், பாவலர்க்கும். கூவிளங்காய் எனவும், ஆவலுற கூவிளங்காய், எனவும், பாட, தேமா எனவும், பிரசங்கிக்க என்பதை மேற்குறித்தவிதிப்படி அதனிடையில ஙகரவொற்றைக்களைந்து பிரசகிக்க என்று நிறுத்திக் கருவிளங்காய் எனவுங் கொண்டாற் சரியாகும். கொர்த்து என்பதைப்பற்றியும் ஆறுமுகவர் நேரான விடைகொடுக்கவில்லை. கோர்த்து என்பது கோத்துஎன இருக்கவேண்டும். ரகரவொற்று அச்சுப்பிழையே. மற்றப்படி மகாகனமபொருந்திய நாலுகலாநிபுணரான வீரமாமுனவர் கோர்த்துஎன்றே பாடிவைத்தாரென்றும், வித்தியா விநோதரும் பிரபல தமிழ்ப்புலவருமாகிய தீ. தீ. வேதகிரிமுதலியார் அதை ஒப்புக்கொண்டு அச்சிற்பதிப்பித்தாரென்றுங் கொள்வது புத்தியன்று. இனிகோத்தல் என்பதற்குப் பகுதிகோ என்பது தானேவிளங்கும, எடுத்தொருவர் காட்டவேண்டியதில்லை. வாதத்தின்பேவீடுள்ளவர்களெல்லாம் அதினுற் சோரமதும், பிடிவாதத்தங்கொண்டு பிதற்றுமதும், புலவர்சடமாய்மூச்சுக்காட்டாமல் அஞ்சமப்படும்படி நிதமெனுமருந்தைப் போதவுட்கொள்வது கடன். திலலையம்பலவாணச்செட்டியார் குமாரர்
யாழ்ப்பாணம் தை மாதம் உ௰. ௧௮௫௬. சுவாமிநாதர்.

புதினசசங்கதி.

இந்தியா தேசத்துக்குப் பிரதான ஸ்தலமாகிய பங்காள தேசத்திலே தேர்ந்த படிப்பையுடைய அநேக இந்து வாலிபர்கள்கூடி விக்கிரகாராதனைச் சடங்குகளையும் அஞ்ஞான பத்திகளையும, சாதிபேதங்களையும விட்டு மனிதரெனப்பட்ட யாவரும் பேதமில்லாமல் ஒரே சகோதரரென்று பாவித்துத் தாங்களே முந்தி உலகத்துக்கு முன்மாதிரியாயிருக்கவேண்டுமென்று புறப்பட்டிருக்கிறார்கள். இச் சங்கத்தினுடைய எண்ணமென்னவெனில், விக்கிரகாராதனைச் சடங்குகளை நீக்கி மெய்த்தேவாராதனையை இஸ்தாபிக்கும்பொருட்டு இங்கிலீஸ்செபப்புத்தகத்திலிருந்து தங்களுடைய சிந்தனைக்கிசைந்த செபங்களை எடுத்துக்கொண்டு அவற்றினாலே மெய்த்தேவனை ஆவியினாலேயும் உண்மையினாலேயுந் தொழுதுகொள்ளவேண்டுமென்று ஏற்பாடுசெய்திருக்கிறார்கள். இந்தச் சங்கத்துக்குப் பிராமணரும், கோசாயிகளும விரோதமாய் எழும்பியிருந்தும், அவர்கள்விக்கினங்களை நீக்கக்கொண்ட கருத்தை நிறைவேற்றவேண்டுமென்று இதுவரையில உறுதியாய்நிற்கிறார்கள்.

இன்னும இந்தச் சங்கத்துக்குச் சேர்ந்த இந்து வாலிபர்கள் தங்களுக்குள்ளேதானே அந்நியொன்னிய அபிக்கமும் ஒருவனையொருவர் தாங்கித் தாபரித்துக்கொள்ளுந் தன்மையுமில்லாமற்போனால், தாங்கள் நிந்தைக்குந் துன்பப்படுத்தலுக்கும் ஏதுவாகித் தங்கள் சுற்றத்தாரிலே தங்கள் சாதி மரபை விட்டுத் தள்ளப்படுதலுக்கும் ஏதுவாயிருக்கிறார்கள். இப்படித் தள்ளப்பட்டுப்போவோமென்று அச்சங்கொள்ளுகிறதினாலே தங்கள் சாதியார் கீழ்ப்பட்டிருந்த கெட்ட பழக்கத்தைக் கெடுக்கும்படி அவர்கள்கொண்டிருக்கும் விருப்பமுங் கெட்டுச் சகலரையுஞ் சீர்ப்படுத்தும்படி அவர்கள் எண்ணியதுக்குத் தகக்கொண்ட ஆசையும அவிந்துபோக அவர்களுந் தாங்கள் முன் செய்துவந்த கெட்ட பழக்கம் பரிசனைகளில் மறுபடியும் ஊடாடி நடை உடை பாவனைக்கேற்ற காலமும மாறுதல டைக்கும வேளையும் இன்னமும் வரவில்லையென்றுதாங்கள்கொண்டநோக்கத்தையும்விட்டுவிடவேதுவாயும்வரும்.

Digitized by Google

## SUMMARY OF NEWS.

### CIVIL APPOINTMENTS.

His Excellency the GOVERNOR is pleased to make the following appointments in the Civil service of this Island.

J. N. Mooyart, Esq. to be Acting Treasurer.

C. R. Buller, Esq. to be Acting Government Agent for the Central Province.

P. E. Wodehouse, Esq. to be Acting Government Agent for the Western Province.

Mr. J. G. Layard, Assistant Government Agent at Kandy, will take charge of the Government Agent's Office until the arrival of Mr. Buller.

Mr. W. C. Gibson, Assistant Colonial Secretary, will remain in charge of the Government Agent's Office at Colombo until the arrival of Mr. Wodehouse

P. A. Dyke Esq. to be Acting Auditor and Accountant General and Controller of Revenue.

J. Price Esq. to be Acting Government Agent and Acting Fiscal for the Northern Province and Acting Collector of Customs for the Northern and Eastern Provinces.

C. P. Walker, Esq. to be Acting District Judge of the District Court of Colombo No. 2 (Negombo.)

P. W. Braybrooke. Esq. to be Acting Assistant to the Government Agent for the Southern Province and Acting District Judge of the District Court of Hambantotte.

The Hon'ble G. C. Talbot, to be Assistant at Matura to the Government Agent for the Southern Province.

H. Templer, Esq. to be Assistant at Galle to the Government Agent for the Southern Province.

K. Mackenzie, Esq. to be Acting Assistant at Kandy to the Government Agent for the Central Province.

E. H. Smedley Esq. to be Acting Assistant at Trincomalie to the Government Agent for the Eastern Province.

Mr. Mackenzie will continue to do duty as Assistant Colonial Secretary and Clerk to the Councils until relieved by Mr Gibson.

Mr. T. C. Power will act for Mr. Mackenzie at Kandy.

By His Excellency's Command, P. ANSTRUTHER.

Colonial Secretary's Office,
*Colombo, 28th Jan. 1843.* *Colonial Secretary.*

### JAFFNA.

***Removal of the Government Agent to Colombo***—Among the recent new civil appointments of the Government is that of Mr. Dyke, late Government Agent of the Northern Province, to be "Acting Auditor, and Accountant General and Controller of Revenue." We understand that Mr. Dyke left Jaffna yesterday morning for Colombo, to assume the duties of his new appointment.—Mr. Dyke has held the office of Government Agent of the Northern Province for about 15 years, and has, we believe, given universal satisfaction by the zealous, impartial, and efficient manner in which he has discharged the duties of his office. His removal is felt by all classes to be a serious loss to the Province, and is we think, sincerly regretted by all. We understand that there is a possibility that he may return to Jaffna and resume the duties of Government Agent; which we hope may, ere long, be realised.

*Supreme Court.*—Simon John Boilau, Esq. Barrister at law, of the Junior Temple and an advocate of the Supreme Court. is expected with the officers of the Northern Circuit, having, it is said, been engaged for the Prisoners in the forthcoming abduction case

*Obituary.*—Died at Jaffna on the 26th January last, Mr. John Alexander Maartenez.—He was of very respectable connections in life, and of the family of the late Dutch commodore of Jaffna.

### CALCUTTA.

*Society of Hindu Reformers.*—A number of Hindu young men have formed themselves into a society, their object being to support each other against the superstitions, prejudices and persecutions of relations and priests —to originate plans for resisting the baleful influences of caste—to carry out enlightened reforms and improvements in their conduct, both public and private, as far as practicable—to resign their ancestorial faith and worship —and finally to adopt a form of prayers and religious devotion. more consonant with their present state of advancement in knowledge and civilization. A native friend has handed to us the leading principle on which this society is to be based, and the objects which it is to have constantly in view. These are laid down in these words.—"The members of this association feel, that without a solemn union among themselves and without mutual support, they expose themselves to ridicule and contempt, and not unfrequently run the risk of being outcasted by orthodox relatives by the practice of conduct dictated alike by conscience and their superior education. Thus in the very attempt to pursue a liberal course of action they feel chillingly discouraged from the dread of being proscribed from home and disowned by family and friends. This potent apprehension of excommunication operates fatally on their desire to shake off the dominion of a degrading custom; extinguishes their laudable thirst for a reformed course of action both in private and public life, and makes them fall back, relaxed, on their old habits under a forced consolation that the time is not yet arrived to admit of any bold and radical change in their mode of life, habits and conduct. The chief opponents they have to encounter are ignorant relations, brahmins, and go-sains. The opposition of the former emanates from their unmitigated bigotry or envy, and of the latter principally from mercenary motives."

Accordingly the primary objects of the society are laid down to be, first, "to defend themselves against the three classes of people mentioned above," secondly, "to carry out a liberal reform as far as practicable, on the existing state of Hindu life and conduct." Besides these, the members propose to renounce their hindu faith and idolatrous worship, and in substitution to adopt the deistical creed, and for their religious worship, they intend compiling a set of prayers from English books, consistent with their peculiar views and belief.—*Bengal Hurkaru. Dec. 16, 1842.*

### *Miscellaneous Intelligence.*

It is said and the fact is much to be deplored that habits of drinking are becoming rapidly prevalent in the upper classes of native Society in Calcutta.

The Doorga Poojah festivals have this year passed off in Bengal without any of those splendors that formerly attracted so many thoughtless Europeans to the presence of the idol.

There are 379, 165 children in the Wesleyan schools in Great Britain.

A wide and effectual door has been opened by divine providence on the western coast of Madagascar where the local and district chiefs are willing that their people should be taught. The cruelty of the persecuting Queen has exasperated her subjects to an enormous degree and a formidable opposition is arising against her.

The Egyptians have invaded Abyssinia. Were the civil wars and this interesting people to be arrested, it is probable that pure Christianity would spread rapidly among them.

It has been recommended that oxide of nitrogen be inhaled as a remedy for cholera, that scourge which in 14 years has carried off 50 millions of human beings.

### OVERLAND INTELLIGENCE.

The last Overland mail arrived at Colombo from Bombay on the 21st January. The Jaffna packets were received on the 26th ult.

The news brought by this mail from Europe is generally of an unimportant character. There were great rejoicings in Eng and on the receipt of the intelligence of the ratification of peace with China and of the recapture of Cabul by the forces in Affghanistan. The Park and Tower guns were fired and the bells of the principal cities rung in celebration of the event. It had also been proposed to observe a general holyday and illumination. The receipt of this news had had a most inspiring effect on the cotton and money market causing an immediate advance of one-eighth of a penny per pound on cotton.

Sir Hugh Gough has been created a Baron, and admiral Parker, Sir Henry Pottinger, Major General Pollock and Major General Nott, Knights Grand Cross of the most honorable military order of the Bath.

*Religious Intelligence.*—There has been a great revival of religion in the island of Skye on the coast of Scotland, affecting persons of all ages—from the child of 6 years, to the old man of gray hairs.—The non-intrusionist Presbyterian Clergymen were in session at Edinburgh, considering "the necessity of resigning their temporalities and thus dissolving their union with the state" The issue of the meeting was looked forward to with great anxiety.

### CONTENTS.—அட்டவணை.


| | |
|---|---|
| Beschi's Instructions to Catechists | 25 |
| Nature of the Catechist's work | ib. |
| Missionary Enterprizes in the South Seas | 26 |
| Good's Book of Nature | 27 |
| Abbott's Lessons on Morals | ib. |
| Mr Poor s letter to his late pupils | 28 |
| English Grammar, and Cassowary | 29 |
| Rules for the conduct of a Christian Life | 30 |
| Scriptural Proofs of the Doctrines and Duties of Christianity | 31 |
| Pancha-Tantra-Katei | 32 |
| Cural and Panchangam | ib. |
| Remarks on the pretended Resemblance between the rites and ceremonies of the Mosaic dispensation, &c. | 33 |
| Correction of certain verses in Negundu | 35 |
| On Tamil Grammar | ib. |
| Summary of English News | 36 |

| | |
|---|---|
| வேதபோதமுக்கம-வேதியர்தொழிலியல்பு | 25 |
| தென்சமுத்திரத்தில் நடந்தசங்கதி | 26 |
| கூட்டென்பவர் செய்தபிரபஞ்சநூல் | 27 |
| நன்மார்க்க-நெறி | 28 |
| இலக்கணச்சாரம் | 29 |
| சழுல்விழுக்கு | ib. |
| கிறிஸ்துமதம் | 30 |
| வேபரீடு, பராபரனுடைய இலட்சணம், அவ்வாகிகள் வேதத்தையாராய்தல | 31 |
| பஞ்சதந்திரக்கதை | 32 |
| குறள்-பஞ்சாங்கம் | ib. |
| கவனிப்பு | 33 |
| நிகண்டு, இலக்கணம் | 35 |
| புதினச்சங்கதி | ib. |


Printed and Published at the American Mission Press, Jaffna, by Eastman Strong Minor.

Digitized by Google